விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 14 புதன்கிழமை (29.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

**மேலும் பல தொற்றுக்கு தயாராகுங்கள்**
ஐ.நா எச்சரிக்கை
05ஆம் பக்கம் பார்க்க

தொலைநோக்குடன்
**புதிய ஆட்சியை உருவாக்க வேண்டும்**
முன்னாள் ஜனாதிபதி
10ஆம் பக்கம் பார்க்க

2022ஆம் ஆண்டு
**பாரியளவில் மின் தட்டுப்பாடு ஏற்படும்**
மின்சார சபை எச்சரிக்கை
03ஆம் பக்கம் பார்க்க

## மூவின மக்களும் ஒன்றிணைந்து
# ஆட்சியை முன்னெடுக்கும்
# அரசை உருவாக்குவோம்

### ஜே.வி.பி தலைவர் அனுர குமார திஸாநாயக்க




(கொழும்பு) ஐக்கிய இலங்கைக்குள் மூவின மக்களுடன் ஒன்றிணைந்து ஆட்சியை முன்னெடுக்க நாம் தயாரென மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் நிகழ்கால அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் குறித்து மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டை முன்வைக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.
(16ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனிலிருந்து நாடு திரும்பிய பெண் உரப்பையில் கட்டிய நிலையில் சடலமாக மீட்பு

### கிளிநொச்சியில் சம்பவம்



(கிளிநொச்சி)
லண்டனில் இருந்து நாடு திரும்பிய வயோதிபப் பெண் கிளிநொச்சியில், காணாமல்போன நிலையில், நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
லண்டனில் தனது மகனுடன் வசித்து வந்த 15

இந்து விக்கிரகங்கள்
## திருடப்படுவதை தடுத்து நிறுத்துங்கள்
### யாழ்.இராணுவத் தளபதியிடம் நல்லை ஆதீனம் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)
யாழ் மாவட்டத்தில் இருந்து இந்து விக்கிரகங்கள் திருடப்படுவதை தடுத்து நிறுத்துங்கள் என நல்லை ஆதீனம் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத்தளபதி நேற்று செவ்வாய்க்கிழமை 15

## அனலைதீவில் பாம்புக்கடிக்கு இலக்கான குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)
அனலைதீவில் பாம்புக் கடிக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையாரான கார்த்தி கேசு ரவீந்திரன் (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார்.
இவர் கடந்த 16ஆம் திகதி இரவு 7 மணிக்கு வீட்டுக்கு வெளியே வந்தபோது பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளார். 15

## பல்கலைக்கழக மாணவர்களை நேரடி விரிவுரைக்கு அழைக்க நடவடிக்கை

(கொழும்பு)
கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டிருந்த அனைத்து பல்கலைக் கழகங்களிலும் மாண 15

கொரோனா
## 22 பேர் பலி

(கொழும்பு)
கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.
அதற்கமைய நாட் 15

## இனிமேல் 'சாப்பிட வேண்டாம்' என்று அரசு மக்களிடம் சொல்லும்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

(கொழும்பு)
தற்போதைய அரசாங்கம் இன்னும் கொஞ்ச நாளில் மக்களை "சாப்பிடவே வேண்டாம்" என்று சொல்லிவிடுவார்கள் என்ற நிலைக்கு வந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார். 15

கொரோனா
## +469

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 469 பேர் 15

## நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியத்தின்
### மாபெரும் தொழிற்சங்கப் போராட்டமும் ஆர்ப்பாட்டப் பேரணியும்

(யாழ்ப்பாணம்)
நிறைவுகாண் மருத்துவ வியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம் வட மாகாணத்தில் மாபெரும் தொழிற்சங்கப் போராட்டத்தையும் ஆர்ப்பாட்டப் பேரணியையும் நாளை வியாழக்கிழமை மேற்கொள்ளவுள்ளது.
இது தொடர்பில் குறித்த சங்கத்தினால் 16

## அடுத்த வாரம் டுபாய் செல்லும் பிரதமர் மகிந்த

(கொழும்பு)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் டுபாய் நாட்டுக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிய வருகிறது.

## அரசின் மீது மக்கள் கோபத்தில் உள்ளனர்
### முன்னாள் பிரதமர் ரணில்

(கொழும்பு)
நாட்டு மக்கள் அரசாங்கத்தின் மீது கடும் கோபத்தில் இருப்பதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர், நாட்டில் டொலர் பற்றாக் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# கட்சி தீர்மானம் எடுத்தால் அரசை விட்டு வெளியேறுவோம்

## அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டுமென்ற அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இந்த சூழ்நிலையில் அரசாங்கத்தில் இருந்து நாளையே நாம் வெளியேருவதென்ற தீர்மானத்தை கட்சி முன்னெடுத்தால் சகல அமைச்சுப் பதவிகளையும் துறந்து அரசாங்கத்தில் இருந்து வெளிநடப்பு செய்வோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உப தலைவருமான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கத்தை விட்டு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வெளியேறினால் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு மட்டுமல்ல சாதாரண பெரும்பான்மையும் இருக்காது என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்தும் நிகழ்கால அரசியல் தீர்மானங்கள் குறித்தும் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்திற்கு எதிரான பாரிய எதிர்ப்பு அலையொன்று உருவாகிக்கொண்டுள்ளது. அரசாங்கத்தின் மீதான அதிருப்தியில் மக்கள் உள்ளனர். அரசாங்கத்திற்குள் எமக்கு அங்கீகாரம் இல்லை என்பதும் உண்மையே. எமது உறுப்பினர்களை அதிகமாக விமர்சிக்கின்றனர் என்பதும் உண்மையே. அரசியல் தீர்மானங்களில் எல்லாம் அரசாங்கம் தவறிழைத்து வருகின்றது என்ற காரணத்தினால்தான் அரசாங்கத்தில் இருந்து எம்மை வெளியேறுமாறு வலியுறுத்துகின்றனர்.

கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களே எம்மை அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமாறு வலியுறுத்திக்கொண்டுள்ளனர். அவர்களின் நிலைப்பாட்டை ஒதுக்கிவிட்டு எம்மால் தனித் தீர்மானம் எடுக்கவும் முடியாது. எனவே சகலரதும் நிலைப்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பான்மை நிலைப்பாடாக அமைந்தால் அதனை ஏற்றுக் கொள்ள நாம் தயாராகவே உள்ளோம்என்றும்அவர் கூறினார். (ம)

## புகையிரத நிலைய அதிபர்களின் தொழிற்சங்க நடவடிக்கை நிறைவு

(கொழும்பு)

புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு வந்த வேலைநிறுத்தம் நிறைவுக்கு வந்துள்ளதாக அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் கசுன் சாமர தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவுடன் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் சாதகமான தீர்வு எட்டப்பட்டதையடுத்து தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய தொடருந்து நிலைய அதிபர்கள் இன்று முதல் பயணச்சீட்டு வழங்கும் நடவடிக்கை மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாக அச்சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார். (ம)

### “சபையின் மாண்பைக் காப்பாற்றுக”

## யாழ். மாநகர முன்றலில் கூட்டமைப்பினர் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்.மாநகர சபையின் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சில மாநகர சபை உறுப்பினர்கள் இணைந்து நேற்றுச்செவ்வாய்க்கிழமை நண்பகல் மாநகர சபை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் “முதல்வர் அராஜகம் ஒழிக!”, “எதேச்சாதிகாரம் ஒழிக”, “சபையை மீறிய முதல்வரா?”, “சபையின் மாண்பைக் காப்பாற்று”, “தமிழ்த் தேசிய நீக்கத்தை நடைமுறைப் படுத்தாதே” உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பி எதிர்ப்பில் ஈடுபட்டனர். (ம-18,33)

## கொழும்பை வந்தடைந்தார் உலகம் சுற்றும் யுவதி



(கொழும்பு)

இலகுரக விமானத்தில் உலகை சுற்றிவரும் பெல்ஜியம் நாட்டவரான சாரா ரதர்போர்ட் இரத்மலானை விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

உலகை சுற்றி வந்த இளம் பெண் என்ற கின்னஸ் சாதனையை படைக்க சாரா திட்டமிட்டுள்ளார். 19 வயதான அவர் தனது உலகசுற்றுப் பயணத்தை ஆகஸ்ட் 18, 2021அன்று தொடங்கினார்.

52 நாடுகளில் உள்ள 5 கண்டங்களில் 51,000 கி.மீ தூரத்தை கடப்பதே அவரது இலக்கு. சாரா 2022 ஜனவரி நடுப்பகுதியில் தனது பயணத்தை நிறைவுசெய்யவுள்ளார் (ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 10 - 1935



இறப்பு 28 - 12 - 2021

## பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம்

அல்வாய் கிழக்கு, அல்வாய் பெரியார்பகுதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (28.12.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - திரவியமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் சிவகுமாரின் (UK) அன்புச் சகோதரியும் சுகுனரஞ்சினியின் அன்பு மைத்துனியும் சிவமணி (நியூஸ்லாந்து), சிவநேஸ்வரன், சிவபாலன் (UK), அன்னராணி (ஆசிரியை - யா/ நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), சிவகுகன் (கனடா), சிவரஞ்சன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோகரன் (நியூஸ்லாந்து), ஞானகி (UK), சண்முகநாதன் (தலைவர், ஆங்கில மொழி கற்பித்தல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), ரமணி (கனடா), நகுலினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவசெந்தூரன், சிவசேகரன், சிவராம், நிவேதா, துஷன், சுகாஷன், விதுர்ஷா, கிருஷிகா, நிவாஷிகா, சௌமியா, காவியா, சந்தோஷ், சிவதர்ஷன், கரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.12.2021) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3375)

முத்துமாரி அம்மன் கோவிலடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- ஒப்புநோக்குநர் (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்)
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை தயாரித்து
பொது முகாமையாளர்,
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு
சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

**முடிவுத் திகதி : 10.01.2022**

பொது முகாமையாளர்
- வலம்புரி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றம் புரிந்தோரை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துங்கள்

## புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம் கோரிக்கை

(வோஷிங்டன்)

**இலங்கையில் நிலவும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவசியமான பங்களிப்பை வழங்குமாறு புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.**

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களான வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, இலங்கைத் தமிழ்ச் சங்கம், ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக்குழு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், அமெரிக்கத் தமிழ் செயற்பாட்டுக் குழு மற்றும் உலகத்தமிழ் அமைப்பு என்பன இணைந்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி ஜியோன் சங்கிற்கு கூட்டாக அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

நீங்கள் இலங்கைக்கான அமெரிக்கத்துதுவராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு நாம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நீங்கள் பெற்றுக்கொண்ட விரிவான இராஜதந்திர அனுபவங்கள், இலங்கை தொடர்பில் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்தக் கடினமான பணியை நிறைவேற்றுவதில் பங்களிப்பை வழங்கும் என்று உறுதியாக நம்புகின்றோம்.

❖ தமிழர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் சர்வதேச மட்டத்திலான கண்காணிப்புடனான பொதுசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும்.

❖ இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியில் இடைக்கால சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையொன்றை நிறுவ வேண்டும்.

❖ இலங்கையின் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டும்.

❖ இனப் படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திடம் இலங்கையில் உள்ள நிலவரத்தைப் பரிந்துரைப்பதுடன் சர்வதேச நீதி மன்றத்தில் இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நீங்கள் இலங்கையில் முன்னெடுக்கவிருக்கும் எதிர்கால இராஜதந்திர நடவடிக்கைகளின் போது இக்கோரிக்கைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை விஜயம்



(கொழும்பு)

சீன - இலங்கை தரப்புகளுக்கிடையே அண்மைக் காலத்தில் சர்ச்சைக்குரிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில் சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வருகைதர உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவருடன் தூதுக்குழுவொன்றும் நாட்டை வந்தடையவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சீன உர கப்பல் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பில் அண்மையில் கருத்தாடல்கள் இடம்பெற்றன.

அவ்வாறான பின்னணியில் சீன வெளிவிவகார அமைச்சர் வருகை முக்கிய கவனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## விமல், வாசு, கம்மன்பிலவை அமைச்சரவையில் இருந்து நீக்கமாட்டேன்- ஜனாதிபதி

(கொழும்பு)

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு தொடர்பில் அபத்தமான கருத்தைக் கொண்டுள்ளமையால் விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகிய மூன்று அமைச்சரவை அமைச்சர்களைப் பதவிகளில் இருந்து நீக்குவதில் தனக்கு எவ்வித உடன்பாடும் இல்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டுப் பொறுப்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் இருப்பின் அமைச்சரவையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக அதிலிருந்து விலகி கருத்து வெளியிடுவதே சிறந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (நி)

## 2022 இல் பாரிய மின்தட்டுப்பாடு இலங்கை மின்சாரசபை எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள மின் உற்பத்தி நிலையங்களுக்கான எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு டொலரைப் பெற்றுக்கொள்ள முடியாவிட்டால், 2022 ஆம் ஆண்டில் பாரிய மின் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என இலங்கை மின்சார சபை எச்சரித்துள்ளது.

ஜனவரி 24 ஆம் திகதி வரை எரிபொருள் கையிருப்பில் உள்ளதால், மின்சார சபைக்கு பிரச்சினை இல்லை என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளரான எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதியை இலங்கை மின்சார சபை பெற முடியாவிட்டால், மின் உற்பத்தியில் பாரிய பிரச்சினையை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## QR Code உடன் பரிசோதனை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனைக்கு சென்று கொவிட்-19 பரிசோதனை செய்பவர்களுக்கு ஆய்வு கூட பரிசோதனை அறிக்கை QR code உடன் வழங்கப்படுவதாக மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி அண்மையில் தெரிவித்துள்ளார். (5-4-18-33)

### நாளை பணிப்புறக்கணிப்பு

## உயிர்காப்பு நடவடிக்கைகள் மட்டுமே இடம்பெறும்

### தாதி உத்தியோகத்தர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணம் முழுவதிலும் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமும் ஆர்ப்பாட்டப் பேரணியும் நாளை வியாழக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாக அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். போதனா மருத்துவமனை பிரிவுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்புடன் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டுவரும் தொழிற்சங்க நடவடிக்கையின் தொடர்ச்சியாக நாளை 30 ஆம் திகதி வியாழக்கிழமை வட மாகாணம் முழுவதிலும் சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் அனைவரும் கவனயீர்ப்பு போராட்டத்திலும் தொடர்ந்து ஆர்ப்பாட்ட பேரணியிலும் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை ஊழியர்கள் அனைவரும் மேற்குறிப்பிட்ட போராட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதனால் மருத்துவமனையில் எமது அவசர மற்றும் உயிர்காப்பு நடவடிக்கைகளில் மட்டுமே சங்க உறுப்பினர்கள் ஈடுபடுவோம் என்பதனால் அவசர தேவையுடையோர் மாத்திரமே அன்றைய தினம் மருத்துவமனைக்கு வருமாறு கேட்டுக் கொள்வதோடு, நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு எமது மனவருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (நி-104)


# மரண அறிவித்தல்

மண்ணில் 21 ✝ 10 ✝ 1956



விண்ணில் 24 ✝ 12 ✝ 2021

பருத்தித்துறை மாதனையினை பிறப்பிடமாகவும், கொழும்பு, தெகிவளை மற்றும் மாதனையினை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர்.நாகலிங்கம் பாஸ்கரன் (பாஸ் ஐயா)**

*அவர்கள் 2021.12.24 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மனோன்மணி அவர்களின் பாசமிகு தவப் புதல்வனும், சறோஜினிதேவியின் (நோர்வே) அன்புச் சகோதரரும், செல்வரூபியின் பாசமிகு கணவரும், நிலாணி (லண்டன்), நிறோஹினி, நிஷாகரன், நிருபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.12.2021) வியாழக்கிழமை அன்று 10 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.*

(9281)

Nishakaran (Sri lanka) 077 797 9315
Nilani (UK) 00447312257453

தகவல்:
குடும்பத்தினர்.
"கரன் குன்றம்" மாதனை


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் தொடரை வென்றது ஆஸி



ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் மூன்றாவது போட்டியில், அவுஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ள அவுஸ்திரேலிய அணி, தொடரையும் வென்றுள்ளது.

மெல்பேர்ன் கிரிக்கெட் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து கிரிக்கெட் அணி, 185 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோரூட் 50 ஓட்டங்களையும் ஜொனி பேர்ஸ்டொவ் 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பட் கம்மின்ஸ் மற்றும் நாதன் லியோன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ஸ்டார்க் 2 விக்கெட்டுகளையும் போலண்ட் மற்றும் கிறீன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 267 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மார்கஸ் ஹரிஸ் 76 ஓட்டங்களையும் வோர்னர் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஜேம்ஸ் அண்டர்சன் 4 விக்கெட்டுகளையும் ரொபின்சன் மற்றும் மார்க்வுட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஸ்டோக்ஸ் மற்றும் ஜெக் லீச் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 82 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 68 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், அவுஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோ ரூட் 28 ஓட்டங்களையும் பென் ஸ்டோக்ஸ் 11 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஸ்கொட் போலண்ட் 6 விக்கெட்டுகளையும் மிட்செல் ஸ்டாக் 3 விக்கெட்டுகளையும் கமரூன் கிறீன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அறிமுக போட்டியிலேயே மொத்தமாக 7 விக்கெட்டுகளை வீழ்த்திய ஸ்கொட் போலண்ட் தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி சிட்னி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4)



கராத்தே சம்மேளனத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட இணையவழி கராத்தே போட்டியில் பருத்தித்துறை தற்காப்புக் கலையக மாணவர்கள் 3 தங்கம், 3 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்தனர். (படம்:-மகாலிங்கம்)

# கங்குலிக்கு கொவிட்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவரும் முன்னாள் இந்திய அணித் தலைவருமான சவுரவ் கங்குலி கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

கொவிட்-19 இற்கு சாதகமாக சோதனை செய்த பின்னர், கங்குலி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பி.சி.சி.ஐ. வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

கங்குலிக்கு கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களும் முன்னதாக வழங்கப்பட்டன.

49 வயதான கங்குலி இந்த ஆண்டின் தொடக்கத்தில் இரண்டு முறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் மற்றும் சில இதய பிரச்சினைகள் காரணமாக அவசர ஆஞ்சியோ பிளாஸ்டிக் சிகிச்சைக்கும் உட்படுத்தப்பட்டார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2481

### நந்தினி




### சர்மா




### கவிதா





### அஜய்




### சாம்பவி




### பரத்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பதவியேற்று பத்தாண்டுகளை நிறைவு செய்த கிம் ஜாங் உன்



(பியாங்யாங்)

வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன் பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

கிம்மின் தந்தையும் நீண்டகால ஆட்சியாளருமான கிம் ஜோங் இல் டிசெம்பர் 2011 இல் இறந்ததிலிருந்து, கிம் ஜாங் உன், நாட்டின் முழுமையான அதிகாரத்தை நிறுவி வட கொரியாவின் அணு மற்றும் ஏவுகணை ஆயுதங்களைப் பலப்படுத்தினார். (நி)

## காங்கிரஸ் கொடி விழுந்ததால் பரபரப்பு

(டில்லி)

இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டு 137 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தியா முழுவதிலும் உள்ள அக் கட்சியின் அலுவலகங்களில் நேற்று சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

அந்தவகையில், டில்லியில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சியின் இடைக்கால தலைவர் சோனியா காந்தி, கட்சி கொடியை ஏற்ற முற்பட்டார்.

கம்பத்தின் அரைவாசி வரை ஏறிய கொடி எதிர்பாராத விதமாக கீழே அவரது கைகளில் வந்து விழுந்தது. இதனையடுத்து அங்கிருந்தவர்கள் உடனடியாக விரைந்து செயற்பட்டு அந்தக் கொடியை எடுத்து சரி செய்தனர். பின்னர் நிகழ்ச்சிகள் தொடங்கின.

எனினும், கட்சிக் கொடி கீழே விழுந்தால் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் சிறிது பரபரப்பு நிலவியதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி)

# கொரோனா கடைசிப் பெருந்தொற்று அல்ல

# மேலும் பல தொற்றுகளை எதிர்கொள்ள உலகம் தயாராக வேண்டும்-ஐ.நா.

(ஜெனிவா)

**கொரோனா என்பது உலகம் சந்திக்கும் கடைசி பெருந்தொற்று அல்ல என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் எச்சரித்து ள்ளார்.**

கொரோனா போன்று இன்னும் நிறைய பெருந்தொற்றுகள் வரலாம். கொரோனா

வைக்கட்டுப்படுத்த நட… டிக்கை எடுக்கும் அதே சம… நேரத்தில் அடுத்த பெருந்

தொற்று நோய்களை எதிர்கொள்ளவும் தயாராக வேண்டும் எனவும் அவர்

வலியுறுத்தியுள்ளார்.

டிசெம்பர்-27 உலக பெருந்தொற்று தயாராதல் தினத்தையொட்டி நேற்று முன்தினம் வெளியிட்ட டுவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலக பெருந்தொற்று தயாராதல் தினத்தில் பெருந்தொற்றுகள் குறித்து உரிய கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் இவற்றைக் கட்டுப்படுத்தும் முயற்சிக்கு உலக நாடுகள் அதிக நிதியை ஒதுக்க வேண்டும் எனவும் ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரேரஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# 2022ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

- நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பில் பின்வருமாறு முடிவு செய்திருப்பதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

01 கட்டளைச் சட்டத்தின் 160(3) ஆம் பிரிவின் நியதிப்படி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பரிபாலன எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் நெற்காணிகள் தவிர்ந்த சகல அசையாச் சொத்துக்களிலிருந்தும் வருடாந்தப் பெறுமதியின் 10வீதமான வரியொன்றினை 2022ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜுன்30, செப்டெம்பர் 30 மற்றும் டிசெம்பர் 31 ஆகிய திகதிகளிலோ அல்லது அதற்கு முன்போ நான்கு கந்தாய தவணைகள் மூலம் செலுத்தப்பட வேண்டும்.

02 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் 10% கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் விகித வருமதியாகவுள்ள அக்கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாய விகிதம் செலுத்தப்பட்டால் 5% கழிவும் அனுமதிக்கப்படும்.

03 மேற்சொல்லப்பட்ட பந்தி-1 இன் பிரகாரம் சொல்லப்பட்ட காலங்களில் விகிதங்கள் செலுத்தப்படாத விடத்து வெற்றுக் காணிகள், வதிவிடங்கள் மீது 15% உம் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% உம் விறாந்துக்கட்டணம் அறவிடப்படும்.

04 ஆதனவரி சார்பாக சகல ஆட்சேபனைகளும் ஒவ்வொரு ஆதனத்திற்கும் தனித்தனியாக 31.01.2022 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் இவ் அலுவலகத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் அனைத்தும் 2022 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமம், வியாபார வரிக் கட்டணங்களை செலுத்தி 31.03.2022 காலப்பகுதிக்குள் உரிமம், பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வியாபார உரிமம் பெற்றுக் கொள்ளாத, வியாபார வரி செலுத்தாத வியாபார நிலையங்கள் அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.
- 2022ஆம் ஆண்டிற்கான விளம்பர கட்டணங்களை செலுத்தி விளம்பரங்களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். புதிதாக அமைக்கப்படும் விளம்பரங்கள் அனுமதி பெற்றே காட்சிப்படுத்தப்பட வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் நகரசபையினால் அகற்றப்படும்.
- 2022 ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி கட்டணங்களை செலுத்தி உரிமத்தகடுகளை பெற்றுக் கொள்ளுமாறும், வளர்ப்பு நாய்களுக்கான பதிவுகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.
- 2022ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும், புதுப்பித்துக் கொள்ளவும் முடியும். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.
- ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை நகர சபையில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
- நகரசபைக்கு உட்பட்ட தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், எல்லைச்சுவர், குழாய்க்கிணறுகள் அமைப்பதாயின் அனுமதி பெற்று அமைக்கப்படல் வேண்டும். புதிய கட்டடத்தினை புனரமைப்பதாயின் நகர சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். கட்டடங்கள் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் நகரசபையுடன் தொடர்பு கொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.

## பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு மற்றும் புதுப்பித்தலுக்கான கட்டணங்கள்

| | அபிவிருத்தி செயற்பாடுகளின் தன்மை | கட்டணங்கள் (வரி தவிர்த்து) | |
|---|---|---|---|
| 1. | காணி உப பிரிவிடுகைகள் | காணி விஸ்தீரணம் (ச.மீ) | தொகை (ரூபா) |
| | | i. 150 - 500 ச. மீ | ரூபா 2,000/- |
| | | ii. 501 - 1000 ச. மீ | ரூபா. 3,000/- |
| | | iii. 1001 - 5000 ச. மீ | ரூபா. 7,500/- |
| | | iv. 5001 - 10000 ச. மீ | ரூபா. 10,000/- |
| | | v. 10000 ச. மீ அல்லது அதற்கு மேல் | ரூபா. 10,000/- + 10,000 சதுர மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1,000 சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் 1000/- ரூபா |
| 2. | தாழ்நிலப்பகுதிகளை/ வயல்காணிகளை மீளுருவாக்கம் செய்தல் | i. 250 ச. மீ வரை | ரூபா.2500/- |
| | | ii. 250 சதுர மீற்றருக்கு மேல் | ரூபா 2,500/- + 250 சதுர மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் 2500/- ரூபா |
| 3.1 | கைப்பிடிசுவர்கள் / தடுப்பு சுவர்களை நிறுவுதல். | ஒவ்வொரு நேரானமீற்றருக்கும் | ரூபா. 100/- |
| 3.2 | அத்திவாரங்களுடன் எல்லைகளை வரையறுத்தல் | ஒவ்வொருநேரானமீற்றருக்கும் | ரூபா. 50/- |
| 4. | தொடர்பாடல் கோபுரங்கள்/ உணர்கொம்பு கோபுரங்கள் / பரிமாற்று கோபுரங்கள் | | ரூபா. 30,000/- |
| 5. | நிரப்பு நிலையங்கள் / சேவை நிலையங்கள் | i. புகை பரிசோதனை | ரூபா. 25,000/- |
| | | ii. நிரப்பு நிலையங்கள் | ரூபா. 75,000/- |
| | | iii. வாகன சேவை நிலையங்கள் | ரூபா. 50,000/- |
| | | iv. வாகன சேவை நிலையங்கள் & புகை பரிசோதனை | ரூபா. 75,000/- |
| | | v. நிரப்பு நிலையங்கள் & தொடர்புடைய ஏனைய பயன்பாடுகள் | ரூபா. 150,000/- |
| 6. | விளம்பரப்பலகைகள் | i. இலத்திரனியல் விளம்பர பலகைகள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 5000/- |
| | | ii. இலத்திரனியலற்ற விளம்பர பலகைகள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 3000/- |
| | | iii. பெயர்பலகைகள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 1000/- |
| | | iv. நிலைச்சட்டங்கள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 6000/- |
| 7. | குப்பை கொட்டும் இடங்கள்/ மாற்றல் நிலையங்கள் / சேதனபசளை ஆலைகள் / சுகாதார நில நிரப்புதல் மற்றும் ஏனைய தொடர்புடைய செயற்பாடுகள். | i. 4000 ச.மீ. வரையிலான காணி விஸ்தீரணம் | ரூபா.50,000/- |
| | | ii. 4000 ச.மீற்றருக்குமேல் | ரூபா. 50,000 + 4000 சதுரமீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 4000 சதுரமீற்றருக்கும் அல்லது அதன்பகுதிகளுக்கும் 10,000/- ரூபா |
| 8. | நீருடனீ தொடர்புபட்ட கட்டடங்கள் மற்றும் நீர் தொடர்பான ஏனைய அபிவிருத்திகள் | | ரூபா. 50,000/- |
| 9. | உலோக சுரங்கம்/ நொறுக்கும் ஆலை, வர்த்தக நோக்கங்களுக்காக மண் அகழ்வு, களிமண் மற்றும் குறுமண் சுரங்கத்திற்கான மண்தூற்றல். | | ரூபா. 10,000/- |
| 10. i | கனிம அகழ்வு தொடர்பான ஆய்வுகள் | i. 1 சதுர கிலோமீற்றர் வரை | ரூபா. 100,000/- |
| | | ii. 1 சதுரகிலோமீற்றருக்குமேல் | ரூபா. 100,000/- + 1 சதுர கிலோ மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1 சதுர கிலோமீற்றருக்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் 10,000/- ரூபா |
| ii | 10( i ) இல் குறிப்பிடப்பட்டதை தவிர்த்து வேறு கனிம அகழ்வு | iii. 1 சதுர கிலோமீற்றர் வரை | ரூபா. 100,000/- |
| | | iv. 1 சதுர கிலோமீற்றருக்கு மேல் | ரூபா. 100,000/- + 1 சதுர கிலோமீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1 சதுர கிலோ மீற்றருக்கும் அல்லது அதன்பகுதிகளுக்கும் 10,000/- ரூபா |
| 11. | சிறுவர் இல்லங்கள் / முதியோர் இல்லங்கள் மற்றும் புனர்வாழ்வு மையங்கள் | காணி விஸ்தீரணம் | தொகை |
| | | i. 400 ச. மீ வரை | ரூபா. 2,500/- |
| | | ii. 401 ச.மீ- 500 ச.மீ | ரூபா. 5,000/- |
| | | iii. 501 ச.மீ- 750 ச.மீ | ரூபா. 10,000/- |
| | | iV. 751 ச.மீ- 1000 ச.மீ | ரூபா. 20,000/- |
| | | V. 1000 ச. மீற்றருக்குமேல் | ரூபா. 20,000 + 1000 சதுர மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 100 சதுர மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் 500/- ரூபா |
| 12. | 1 இலிருந்து 11 வரையானதை தவிர்த்து ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகள் | தளப்பரப்பு | தொகை |
| | | i. 400 ச.மீவ ரை | ரூபா. 5,000/- |
| | | ii. 401 ச.மீ- 500 ச.மீ | ரூபா. 10,000/- |
| | | iii. 501 ச.மீ- 750 ச.மீ | ரூபா. 25,000/- |
| | | iv. 751 ச.மீ - 1000 ச.மீ | ரூபா. 50,000/- |
| | | V. 1000 ச. மீற்றருக்குமேல் | ரூபா. 50,000/- + 1000 சதுர மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 100 சதுரமீற்றருக்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் 500/- ரூபா |
| 13. | அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கான மாற்றங்கள் (தளப்பரப்பு அதிகரிக்கப்படாமல்) | 1000 ச. மீவ ரை, ரூபா. 5,000/-<br>1000 ச. மீற்றருக்குமேல், ரூபா 10,000/- | |
| 14. | போக்குவரத்து தாக்க மதிப்பீட்டு சிபாரிசு (போ. தா. ம) | ரூபா. 60,000/- | |
| 15. | சுற்றுச்சூழல் ஆலோசனை குழுவிடமிருந்தான சுற்றுச்சூழல் பரிந்துரைகள்-சு.ஆ.கு | ECC ரூபா. 50,000/-<br>EIA ரூபா.150,000/- | |
| 16. | பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசு புதுப்பித்தல் (பூ. தி. சி) | i. செல்லுபடியாகும் காலம் காலாவதியாவதற்கு முன்னரே விண்ணப்பிக்கப்படுமாயின் - பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசை பெற்றுக் கொள்ளும் போது செலுத்தப்பட்டதொகையின் 25 %.<br>ii. காலாவதியாகும் திகதியிலிருந்து 1 வருடத்திற்குள் விண்ணப்பிக்கப்படுமாயின் - பூர்வாங்க திட்டமிடல்சிபாரிசின் ஆரம்பத்தொகையின் 50 %.<br>iii. காலாவதியாகும் திகதியிலிருந்து 1 வருடத்திற்குஅப்பால்விண்ணப்பிக்கப்படுமாயின் - பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசின் முழுத்தொகை | |
| 17. | பூர்வாங்க திட்டமிடல் சிபாரிசின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கல். | ரூபா.10,000/- | |
| 18. | பூர்வாங்கதிட்டமிடல் சிபாரிசினை மூன்றாம் தரப்பினருக்கு கைமாற்றல் | ரூபா. 25,000/- | |
| 19. | துரித செயற்பாடு (அனைத்து பிரதான தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்ட நாளிலிருந்து 7 வேலை நாட்களுக்குள்) | சாதாரண கட்டணத்தை நான்கு மடங்கு | |
| 20. | நிர்வாக செலவுகள் | ரூபா.5,000/- | |
| 21. | சமய செயற்பாடுகள் மற்றும் குறை வருமான வீடமைப்பு செயற்றிட்டங்கள் தொடர்பான கட்டணங்கள் | மேலே குறிப்பிடப்பட்ட நிர்வாகச் செலவுகளுக்கான ரூபா 5000 தவிர்த்து, விலக்களிக்கப்பட்டுள்ளது | |

(C-3373)

(தொடர்ச்சி 7 ஆம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்
# 2022ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

## அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் மற்றும் புதுப்பித்தலுக்கான கட்டணங்கள்

| | அபிவிருத்தி செயற்பாடுகளின் தன்மை | கட்டணங்கள் (வரி தவிர்த்து) | | | |
|---|---|---|---|---|---|
| 1. | காணி உப பிரிவிடுகைகள் | காணி விஸ்தீரணம் (ச.மீ) | செயற்பாட்டுக் கட்டணம் | | |
| | | 150 ச.மீ-300 ச.மீ | காணித்துண்டொண்டிற்கு 1000 ரூபா | | |
| | | 301 ச.மீ- 600 ச.மீ | காணித்துண்டொண்டிற்கு 800 ரூபா | | |
| | | 601 ச.மீ-900 ச.மீ | காணித்துண்டொண்டிற்கு 600 ரூபா | | |
| | | 900 ச. மீற்றருக்கு மேல் | காணித்துண்டொண்டிற்கு 500 ரூபா | | |
| 2. | கைப்பிடிசுவர்கள் / தடுப்பு சுவர்களை நிறுவுதல். | ஒவ்வொரு நேரான மீற்றருக்கும் | ரூபா.100/- | | |
| 3. | தொடர்பாடல் கோபுரங்கள்/ உணர்கொம்பு கோபுரங்கள் / பரிமாற்று கோபுரங்கள் | ரூபா. 40,000/- | | | |
| 4. | நிரப்பு நிலையங்கள்/வாகன சேவை நிலையங்கள்/புகை பரிசோதனை | ஒவ்வொரு 1 ச. மீற்றருக்கும் | ரூபா. 100/- | | |
| 5. | விளம்பரப்பலகைகள் | i. இலத்திரனியல் விளம்பரப் பலகைகள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 2,500 /- | | |
| | | ii. இலத்திரனியலற்ற விளம்பரப் பலகைகள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 1,500/- | | |
| | | iii. பெயர்ப்பலகைகள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும்) | ரூபா. 500/- | | |
| | | iv. நிலைச்சட்டங்கள் (ஒவ்வொரு ச. மீற்றருக்கும் ) | ரூபா. 1,000/- | | |
| 6. | குப்பை கொட்டும் இடங்கள்/ மாற்றல் நிலையங்கள் /சேதன பசளை ஆலைகள் / சுகாதார நில நிரப்புதல் மற்றும் ஏனைய தொடர்புடைய செயற்பாடுகள் | 1 ஹெக்ரெயர் வரை | ரூபா.25,000/- | | |
| | | 1 ஹெக்ரெயருக்குமேற்பட்ட | 1 ஹெக்ரெயருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1 ஹெக்ரெயருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 5000 ரூபா | | |
| 7. | வதிவிடம் மற்றும் வதிவிடமல்லா கட்டடங்கள் | தளப்பரப்பு (ச.மீ) | வதிவிடம் (ஒவ்வொரு ச.மீற்றருக்கும்) தனிவீடு | வதிவிடமல்லா (ஒவ்வொரு ச.மீற்றருக்கும்) அடுக்குமாடி குடியிருப்பு | வதிவிடமல்லா (ஒவ்வொரு ச.மீற்றருக்கும்) |
| | | 400 ச. மீ வரை | ரூபா.20/- | ரூபா. 25/- | ரூபா. 25/- |
| | | 401 ச. மீ- 1000 ச. மீ | ரூபா.22/- | ரூபா. 27/- | ரூபா.27/- |
| | | 1001 ச. மீ - 1500 ச. மீ | ரூபா.25/- | ரூபா. 30/- | ரூபா.30/- |
| | | 1501ச. மீ -2000 ச. மீ | ரூபா. 25/- | ரூபா. 32/- | ரூபா. 32/- |
| | | 2000 ச. மீற்றருக்குமேல் | ஒவ்வொரு மேலதிக 90 ச. மீற்றருக்கும் 2000 ரூபா | ஒவ்வொரு மேலதிக 90 ச. மீற்றருக்கும் 2000 ரூபா | ஒவ்வொரு மேலதிக 90 ச. மீற்றருக்கும் 2000 ரூபா |
| 8. | வர்த்தக நோக்கங்களுக்காக<br>i. நீச்சல்தடாகங்கள் (மேல்தளமேடை உள்ளடங்கலான)<br>ii சூரிய மின் தகடுகள் | தளப்பரப்பு (ச.மீ) | கட்டணம் (ரூபா) | | |
| | | Up to 300 ச. மீ | ரூபா. 6,000/- | | |
| | | 301 - 500 ச. மீ | ரூபா. 15,000/- | | |
| | | 501- 1000 ச. மீ | ரூபா. 30,000/- | | |
| | | 1000 ச. மீற்றருக்கு மேல் | ரூபா. 30,000/- + 1000 ச.மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 100 ச.மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 1000 ரூபா | | |
| 9. | i. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கான இணைப்புகளும் மற்றும் விரிவாக்கமும் | ஏற்கனவே செலுத்தப்பட்ட செயற்பாட்டு கட்டணத்தின் 25 % + மேலதிக இணைப்பு பகுதிக்கான கட்டணம். | | | |
| | ii .அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கான மாற்றங்கள் (தளப்பரப்பு அதிகரிக்கப்படாமல்) | ஏற்கனவேசெலுத்தப்பட்டசெயற்பாட்டுகட்டணத்தின் 25 % | | | |
| 10. | அபிவிருத்தி அனுமதி பத்திரத்தினை மூன்றாம் தரப்பினருக்கு கைமாற்றல் | ரூபா. 25,000/- | | | |
| 11. | அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடி காலத்தினை மேலும் ஒருவருடத்திற்கு நீடித்தல் | 1000 ச.மீவரை | 1000 ச.மீவரை | | |
| | | 1000 ச.மீற்றர் வரை | ரூபா. 5,000/- | | |
| | | 1000 ச. மீற்றருக்குமேல் | ரூபா. 10,000/- | | |

## பசுமை கட்டட சான்றிதழுக்கான கட்டணம்

| | அபிவிருத்தி செயற்பாடுகளின் தன்மை | செயற்பாட்டு கட்டணங்கள் (வரி நீங்கலாக) |
|---|---|---|
| 1. | பசுமைக் கட்டட சான்றிதழின் அனைத்து மட்டங்களுக்கான பதிவு | ரூபா. 5000/- |
| 2. | இறுதி பசுமை கட்டட சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் (உயர்ந்தபட்சம் 1 மில்லியன்) | ஒவ்வொருசதுரமீற்றருக்கு (ச.மீ) * |
| | i. சான்றிதழ் மட்டம் | ரூபா. 600/- |
| | ii. வெள்ளி மட்டம் | ரூபா. 500/- |
| | iii. தங்க மட்டம் | ரூபா. 400/- |
| | iv. பவளமட்டம் | ரூபா. 300/- |
| | *பதிவுசெய்யும் போது ஆரம்ப செலவின் 75 % | |
| 3. | அரச மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், மதத்தலங்கள், அரச சுகாதார நிறுவனங்கள், முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்கள் | ஒவ்வொருசதுரமீற்றருக்கும்ரூபா. 50/- |
| | அபிவிருத்தி அனுமதி பத்திர விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட பசுமை மட்டத்திற்கும் மற்றும் அமைவுச் சான்றிதழ் வழங்கப்படும் காலப்பகுதியில் அடையப்பட்ட உண்மையான பசுமை மட்டத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்படுமிடத்து, செயற்பாட்டு கட்டணமானது அடையப்பட்ட பசுமை மட்டத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்படும். | |

## பிந்தைய அனுமதிப்பத்திர தொடர் மற்றும் கண்காணிப்பு அறிக்கைக்கான கட்டணங்கள்

| கட்டட கட்டுமானங்கள் | தளப்பரப்பு (ச.மீ) | கட்டணம் (ரூபா) |
|---|---|---|
| | 900 ச.மீ - 2000 ச.மீ | ரூபா. 3,000/- |
| | 2001 ச.மீ - 5000 ச.மீ | ரூபா. 5,000/- |
| | 5000 ச.மீ மேல் | ரூபா. 10,000/- |

## மேவுதல் அங்கீகாரத்திற்கான சேவைக் கட்டணங்கள் (செயற்பாட்டு கட்டணத்திற்கு மேலதிகமாக)

| | அபிவிருத்தி செயற்பாடுகளின் தன்மை | செயற்பாட்டு கட்டணம் (வரி நீங்கலாக) | |
|---|---|---|---|
| 1. | தேவையான அனுமதிகளை பெறாமல் காணிக்கான உபபிரிவிடுகை மேற்கொள்ளப்படல் | ரூபா. 3,000/- ஒவ்வொருகாணித் துண்டிற்கும் | |
| 2. | அனுமதியைபெற்றுக்கொள்ளாமல்கட்டடங்களைநிறுவுதல்/ மேலதிகசேர்ப்புகள் / மீளநிறுவுதல். | வதிவிடம் (ஒவ்வொருசதுரமீற்றருக்கும்) | வதிவிடமல்லாத (ஒவ்வொரு சதுர மீற்றருக்கும்) |
| | i. அத்திவார பணிகளின்நிறைவு (தூண்பீடமட்டம்வரை) | ரூபா. 200/- | ரூபா. 500/- |
| | ii. தூண்கள்மற்றும் விட்டங்கள்உள்ளடங்கலானகூரைமட்டம்வரையிலானநிர்மாணம் (கூரைநீங்கலாக) | ரூபா. 300/- | ரூபா 1,000/- |
| | iii. சுவர்களுடனானகூரைமட்டம்வரையானநிர்மாணம் | ரூபா. 400/- | ரூபா. 1,500/- |
| | iv. குடியிருப்பாளர்களுக்காகநிறைவுசெய்யப்பட்டகட்டுமானம் | ரூபா. 500/- | ரூபா. 2,000/- |
| | v. கைபிடிச்சுவர்கள்/ தடுப்புச்சுவர்களைநிர்மாணித்தல் | ரூபா. 200/- (ஒவ்வொரு நேரான மீற்றருக்கும்) | ரூபா. 500/- (ஒவ்வொரு நேரான மீற்றருக்கும்) |
| | vi. தொலைத்தொடர்பாடல், பரிமாற்றம்மற்றும் உணர்கொம்பு கோபுரங்களைநிறுவுதல் | நிர்மாணம் -நிலமட்டம்ரூபா. 150,000/-<br>நிர்மாணம் - கூரைமேல்ரூபா. 100,000/- | |
| 3. | அமைவுச்சான்றிதழைபெற்றுக்கொள்ளாமல்குடியிருத்தல் /பயன்படுத்தல் | நாளொன்றுக்குரூபா. 100/- | |
| 4. | மகுளூர்தி நிறுத்துமிடங்கள் (ஆதனத்தினுள் வழங்கப்படாத ஒவ்வொரு மகுளூர்தி நிறுத்துமிடங்களுக்கான சேவைக்கட்டணம்) | | |
| | i. அனைத்துமாநகர சபைகளுக்கும் | நிலையான மகுளூர்தி நிறுத்துமிடங்கள்- ரூபா. 500,000/-<br>பாரஊர்திகள் - ரூபா. 1,000,000/-<br>கொள்கலன்கள் அடங்கலான பல் அச்சு வாகனங்கள் - ரூபா. 2,500,000/- | |
| | ii. நகர சபை | அனைத்து வாகனங்களுக்கும்- ரூபா. 500,000/- | |
| | iii. பிரதேசிய சபை | அனைத்து வாகனங்களுக்கும் - ரூபா. 250,000/- | |
| 3. | அங்கீகரிக்கப்பட்டநிறுத்துமிடங்களைவேறுபயன்பாட்டிற்குமாற்றுதல் | அங்கீகரிப்பட்டவாறு நிறுத்துமிடமாக மாற்றப்படும்வரை ஆண்டொன்றுக்கு 10 % அதிகரிப்புடன் ஒரு நிறுத்துமிடத்திற்கு ரூபா 20,000 | |

(C-3373)

(தொடர்ச்சி 8 ஆம் பக்கத்தில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நகராட்சி மன்றம் 2022 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்

அமைவுச் சான்றிதழை வழங்குவதற்கான கட்டணங்கள்

| அபிவிருத்தி செயற்பாடுகளின் தன்மை | செயற்பாட்டு கட்டணம் (வரி நீங்கலாக) | | | |
|---|---|---|---|---|
| 1. காணி உபபிரிவிடுகை | ரூபா. 1,000/- ஒவ்வொரு காணித்துண்டிற்கும் | | | |
| 2. கட்டட கட்டுமானங்கள் | தளப்பரப்பு (ச.மீ) | வதிவிடம் | | வதிவிடமல்லாத |
| | | தனிவீடு | அடுக்குமாடி குடியிருப்பு | |
| | 400 சதுர மீற்றர் வரை | ரூபா. 4,000/- | ரூபா. 5,000/- | ரூபா. 5,000/- |
| | 400 சதுரமீற்றருக்கு மேல் | ரூபா. 4000/- + 400 ச. மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1 ச. மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 15 ரூபா | ரூபா. 5000/- + 400 ச.மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1 ச.மீற்றருக்கும் அல்லது அதன்பகுதிக்கும் 20 ரூபா | ரூபா. 5000/- + 400 ச. மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 1 ச.மீற்றருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் 25 ரூபா |
| 3. தொலைத் தொடர்பாடல் கோபுரங்கள்/பரிமாற்ற கோபுரங்கள்/உணர்கொம்பு கோபுரங்கள் | ரூபா. 5,000/- | | | |
| 4. கைபிடிச்சுவர்கள்/ தடுப்புச்சுவர்கள் | ரூபா. 25/- ஒவ்வொரு நேரான மீற்றருக்கும் | | | |
| 5. பொது கட்டடங்களுக்கான அமைவுச் சான்றிதழைப் புதுப்பித்தல் | ரூபா. 10,000/- | | | |

பயன்பாட்டுமாற்றத்திற்கானகட்டணங்கள்

(வரிநீங்கலாக)

| | தளப்பரப்பு (ச.மீ) | கட்டணம் (ரூபா.) |
|---|---|---|
| செயற்பாட்டு கட்டணம் | 45 வரை | 1,000/- |
| | 45 – 90 | 1,500/- |
| | 91 – 180 | 1,750/- |
| | 181 – 270 | 2,000/- |
| | 271 – 450 | 2,500/- |
| | 451 – 675 | 2,750/- |
| | 676 – 900 | 3,000/- |
| | 900 மேல் | 900 ச.மீற்றருக்கு மேற்பட்ட ஒவ்வொரு மேலதிக 90 ச. மீற்றருக்கும் 500 ரூபா |
| பயன்பாட்டு மாற்ற அனுமதிபத்திரத்திற்கான கட்டணம் | | |
| 1. வதிவிட பயன்பாட்டிலிருந்து வதிவிட மல்லா பயன் பாட்டிற்கு மாற்றுதல் | ரூபா. 750/- 1 சதுரமீற்றருக்கு | |
| 2. வதிவிடமல்லா பயன்பாட்டிலிருந்து வதி விடமல்லா பயன்பாட்டிற்கு மாற்றுதல் | ரூபா. 500/- 1 சதுரமீற்றருக்கு | |

**குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக, கள ஆய்விற்கான போக்குவரத்து செலவீனமாக ரூபா 50 அறவிடப்படும் . எவ்வாறாயினும், நகர அபிவிருத்தி அதிகார சபையானது சந்தையின் எரிபொருள் விலையை கருத்தில்கொண்டு இக்கட்டணத்தை மாற்றலாம்**

❖ தொழில் வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் ஆண்டு 22 ஆம் திகதி 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/ வியாபார நடவடிக்கைகளை நகரசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

❖ பொது மக்கள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் திண்மக் கழிவுகளை நகரசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம்பிரித்து வழங்கப்படல் வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மற்றும் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்.

**திருமதி. சிவமங்கை இராமநாதன்,**
**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(C-3373)

## வவு.வடக்கு பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

(குருமன்காடு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வசம் சென்ற வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு 4 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வசமிருந்த வவுனியா வடக்கு பிரதேச சபையின் பாதீடு முன்னாள் தலைவர் சு.தணிகாசலத்தினால் முன்வைக்கப்பட்டு இரண்டு தடவைகள் தோல்வியடைந்த நிலையில் புதிய தவிசாளர் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் த.பார்த்தீபன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்நிலையில், சபையின் புதிய தவிசாளர் த.பார்த்தீபனால் 2022 ஆம் ஆண்டுக்கான புதிய பாதீடு சபை அமர்வில் முன்வைக்கப்பட்டது. பாதீடு மீதான விவாதங்கள் இடம்பெற்ற பின் பாதீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இதில் பாதீட்டுக்கு ஆதரவாக 15 வாக்குகளும், பாதீட்டுக்கு எதிராக 11 வாக்குகளும் கிடைத்த நிலையில் 4 மேலதிக வாக்குகளினால் பாதீடு வெற்றி பெற்றது. இதன்மூலம் சுதந்திரக் கட்சி தனது ஆட்சியை வவுனியா வடக்கு பிரதேச சபை யில் உறுதிப்படுத்திக் கொண்டது. (5-250)

## கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வட மாகாண தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை 30 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறும்.

எனவே அனைத்து தொண்டராசிரியர்களும் தமது ஆவணப் பிரதிகளுடன் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண தொண்டராசிரியர் ஒன்றியத் தலைவர் ச. சதீசன் அறிவித்துள்ளார். (5)



கலை நிறுவன நடன மற்றும் இசை அரச விருது வழங்கும் 2019 நிகழ்வு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் வேம்படி மகளிர் கல்லூரியில் தரம் 9இல் கல்வி பயிலும் றஜீபன் அபிநயா தனி நடனத்திற்கான முதலாமிடத்தை தேசியத்தில் பெற்றுக் கொண்டார் . ஏழிசை மிருதங்க நர்த்தனாலய ஆசிரியர் திருமதி பாலினி கண்ணதாசனின் நெறியாள்கையில் இந் நடன ஆற்றுகை நிகழ்ந்தது.

## அருட்தந்தையர்களின் வாகனம் மீது மதுபோதையில் நின்ற குழுவினரால் தாக்குதல்

(தருமபுரம்)

கிளிநொச்சி மயில்வாகனபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நத்தார் நிகழ்வு முடித்து கார் ஒன்றில் பயணித்த அருட்தந்தையர்களின் வாகனம் வீதியில் மறிக்கப்பட்டு அடித்து உடைக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர் பில் மேலும் தெரிய வருகை யில், நத்தார் ஒன்றுகூடல் நிகழ்வு முடித்து ஏழு அருட் தந்தையர்களில் ஒருவரை தவிர ஏனையவர்கள் தங்களின் அருட்தந்தையர்களுக்குரிய ஆடைகளுடன் திரும்பிக்கொண்டிருந்த போது மதுபோதையிலிருந்த சுமார் 10 இளைஞர்களைக் கொண்ட குழுவொன்று மயில் வாகனபுரத்தில் வீதி யில் மறித்து பணம் கோரி யுள்ளனர்.

அருட்தந்தையர்கள் [illegible] தெரிவித்த போது [illegible] பயணித்த வாக னம் அடித்து உடைக்கப்பட்ட தோடு, அருட்தந்தையர்கள் மீதும் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து நேற்று மூன்று சந்தேக நபர் கள் கைது [illegible] (5-4-316)

## ஆட்டோ- மோ.சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி செட்டியார் மடம் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம் பெற்ற விப த்தில் இளைஞன் ஒருவர் படு காயமடைந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

அராலி - செட்டியார்மடம் வீதியால் பயணித்த மோட் டார் சைக்கிளும்முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்கு ள்ளாகின.

இந்த விபத்தில் , மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

முச்சக்கர வண்டியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அராலியை சேர்ந்த 21 வயது இளைஞனே இவ்வாறு படு காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**29.12.2021**
**மார்கழி 14, புதன்கிழமை**
**தசமி முற்பகல் 11.57 மணிவரை**
**சுவாதி முன்னிரவு 11.08 மணிவரை**
**சுபநேரம் 4.08-6.28 மணிவரை**
**இராகு காலம் -12.28-1.58 மணிவரை**
**சந்திராஷ்டமம்- உத்திரட்டாதி, ரேவதி**

வளவன்




குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியமான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும்.




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.




கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், கருத்து வேறுபாடுகள் அகலும்.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், கற்பனை மிகுதியான நாள், உடல் நலன் சீராகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் முன்னேற்றம் தரும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




எதிர்பாராத உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.




ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள்.

நீ நினைத்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

# நல்லை ஆதீன முதல்வரை சந்தித்த யாழ்.இராணுவ கட்டளைத் தளபதி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இராணுவ கட்டளைத் தளபதி நேற்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளை சந்தித்து கலந்துரையாடினார்.

நல்லை ஆதீனத்திற்கு வருகை தந்த யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியை நல்லை ஆதீன குரு முதல்வர் பொன்னாடை போர்த்தி வரவேற்றதோடு இராணுவ தளபதியினால் நல்லை ஆதீன குருமுதல்வருக்கு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

குறித்த சந்திப்பில் இராணுவத் தளபதியிடம் ஆதீன முதல்வர் சில கோரிக்கைகளை முன்வைத்தார்.

எனவே இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன் எதிர்வரும் தைப்பொங்கல் உற்சவத்தினை இந்து மக்கள் அனைவரும் சுதந்திரமாக கொண்டாடுவதற்குரிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும். மற்றும் கிராமங்களில் ஆலய வழிபாட்டுக்கு இராணுவத்தினரால் இடையூறு ஏற்படாதவாறு செயற்பட வேண்டும் எனவும் குறிப்பாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களுக்குச்சென்று பொதுமக்கள் தமது வழிபாடுகளையும் மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் எதிர்வரும் புத்தாண்டு நிகழ்வினை பொதுமக்கள் சுதந்திரமாகக் கொண்டாடுவதற்கு அனுமதிவழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது இனங்களுக்கிடையில் விரிசல் நிலை ஏற்படுகின்ற நிலை காணப்படுகிறது. இது தொடர்ந்தால் பெரிய ஒரு பிரச்சினையாக உருவெடுக்கும். அதனை நிறுத்துவதற்கு தங்களாலான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆதீன முதல்வர் முன்வைத்தார்.

அதற்கு பதில் அளித்த இராணுவக் கட்டளைத் தளபதி இவை தொடர்பில் தான் உரிய நடவடிக்கையை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி எடுப்பதாகவும் தெரிவித்தார். (5-4-18-33-104)



யாழ். மாவட்ட மட்டத்தில் கிராம உத்தியோகத்தர்களுக்கான உற்பத்தித்திறன் போட்டியில் முதல் இடத்தைப் பெற்ற கிராம உத்தியோகத்தர் பா.வைகுந்தனுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் தலைமையில் நேற்று முன்தினம் பாராட்டுவிழா இடம் பெற்றது.

(படம்:-மகாலிங்கம்)

# கஞ்சாவுடன் கைதானவர்களுக்கு முப்பது ஆயிரம் அபராதம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் கஞ்சா போதைப் பொருளுடன் கைதான இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத் தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டபோது 17 கிராம் மற்றும் 19 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கொடிகாமம்-பாலாவி பகுதியைச் சேர்ந்த இரண்டு பேரை கைது செய்தனர்.

கைதான இருவரையும் நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது இருவருக்கும் தலா 15,000 ரூபாய் விகிதம் அபராதம் விதிக்கப்பட்டது. (5-4-30)



நத்தார் தினத்தை சிறப்பிக்கும் முகமாக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தினரால் கிறிஸ்து பிறப்பு காட்சிப்படுத்தல்களுடனான கரோல் நிகழ்வு இரு நாட்கள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2021 - 13.01.2022



**மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்படும் மேஷ இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் இருக்கிறார். அவரோடு கேது இணைந்துள்ளார். லாபஸ்தானத்தில் குரு இருக்கிறார். எனவே பொருளாதார நிறைவு ஏற்படும். உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

# கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்

### இலாப குருவின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் குரு பகவான் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இராசிக்கு அதிபதியானவர் குரு. பாக்கிய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு, லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைத்தாலும் விரயங்களும் அதிகரிக்கும். சொத்து விற்பனையால் இலாபம் உண்டு. தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டில் இருந்து அனுகூலத் தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல், இலாகா மாற்றம் கிடைக்கலாம்.

### மகர புதனின் சஞ்சாரம்

மார்கழி 12 ஆம் திகதி, மகர இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். சகாயஸ்தானம் மற்றும் ஜீவன ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், இப்பொழுது தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எதிர்பார்த்ததைக் காட்டிலும் தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்திற்காக முயற்சி செய்தவர்களுக்கு நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். 3 ஆம் இடத்திற்கு புதன் அதிபதியாக இருப்பதோடு, அந்த இடத்தை குருவும் பார்ப்பதால் உடன் பிறப்புகள் உதவிகரமாக இருப்பர். சுக்கிரனோடு புதன் இணைந்து புத சுக்கிரயோகத்தை உருவாக்குவதால், பூமி வாங்குவது அல்லது விற்பதன் மூலம் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் பாக்ய ஸ்தானத்தில் பஞ்சமாதிபதியோடு கூடும்பொழுது மிகுந்த நற்பலன் கிட்டும். குறிப்பாக




பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியனோடு சுக்கிரன் சேர்வதால் பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். இதன் விளைவாக 'புத ஆதித்ய யோகம்' செயற்படும். கல்வி சம்பந்தமாக நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். பெற்றோர் வழியில் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். பிள்ளைகளை நெறிப்படுத்தி வைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கிப் பயணிக்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறும். இம்மாதம் நடராஜர் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வருமானத்தில் நிறைவு ஏற்படும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை ஏற்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். தாய் - தந்தை உங்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவர். பணிபுரியும் இடத்தில் நீங்கள் கேட்ட சலுகைகளும் சம்பள உயர்வும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். சுபச் செலவு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களை அனுசரித்துக் கொள்வது நல்லது.



**தங்களுக்கு கிடைத்த பதவி கொண்டு பிறருக்கு உதவும் ரிஷப இராசி வாசகர்களே!**

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசியில் ராகுவும் சப்தமஸ்தானத்தில் கேதுவும் இருக்கிறார்கள். எனவே சர்ப்ப தோஷத்தின் ஆதிக்கத்தில் இருக்கின்றது. இராசிநாதன் சுக்கிரன், 'மந்தன்' எனப்படும் சனியோடு ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே செயற்பாடுகள் மந்த நிலையில் இருக்கும். செலவு கூடும். எதையும் நினைத்த மாத்திரத்தில் செய்ய இயலாது.

# எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும்

### பத்தாமிடத்து குருவின் சஞ்சாரம்

இப்பொழுது பெயர்ச்சியான குரு பகவான் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். 10 இல் சஞ்சரிக்கும் பொழுது பதவி மாற்றம், இடமாற்றம் உண்டு என்பது பொதுநியதி. ஆனால் உங்கள் இராசியைப் பொறுத்தவரை தசாபுத்தி வலுவாக இருப்பவர்கள் பயப்படத் தேவையில்லை. வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாகவே அமையும்.

இதுவரை தடைப்பட்டு வந்த உத்தியோகத்திற்கான முயற்சி, இப்போது வெற்றியாகும். தொழில் புரிபவர்களுக்கு பங்குதாரர்கள் விலகினாலும் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். தூரதேசத்தில் இருந்து அழைப்புகள் வந்தாலும் அதை யோசித்து ஏற்றுக்கொள்வதே நல்லது.

### மகர புதனின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மார்கழி 12 ஆம் திகதி பாக்கிய ஸ்தானத்திற்கு செல்கிறார். அப்போது எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. 'புத-சுக்கிர யோகம்' செயற்படுவதால் வீடு கட்ட வேண்டும் அல்லது வாங்க வேண்டும் என்று நினைத்தால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். பெண் வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் கவனமுடன் செயற்பட வேண்டும். உங்கள் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்தால் யோசித்து செய்வது நல்லது. பயணங்களால் சில பிரச்சினை வரலாம். சுபச்செலவு அதிகரிக்கும்.

### தனுசு சுக்கிரனின் சஞ்சாரம்

மார்கழி 25 ஆம் திகதி தனுசு இராசிக்கு சுக்கிரன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். அஷ்டமத்தில் சூரியனும், சுக்கி




ரனும் இணைந்து சஞ்சரிக்கின்றனர். இது அவ்வளவு நல்லதல்ல. சுகாதிபதி 8 இல் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட அச்சுறுத்தல்கள் நிகழலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். அதேநேரத்தில் 6 இற்கு அதிபதி சுக்கிரன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது, 'விபரீத இராஜயோகம்' ஏற்படும். பல நாட்களாக நடைபெறாத காரியங்கள் இப்போது நடைபெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதிப் புதிய திட்டங்கள் தீட்டி அதை செயற்படுத்துவீர்கள்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

மார்கழி 27 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் வக்கிர இயக்கத்தில் வருகிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு.

எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். பங்காளிப் பகை மாறும். புதிய வாகனம் வாங்கிப் பயணம் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் துர்க்கை வழிபாடு உங்கள் துயரங்களைப் போக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். பணியிடத்தில் இடமாற்றங்கள் உறுதியாகலாம். கணவன்-மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நல்ல சந்தர்ப்பங்கள் நாடிவரும்.

பிள்ளைகளின் கல்வி, வேலை வாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணிபுரியும் பெண்களுக்கு பல நாட்களாக எதிர்பார்த்த கனவுகள் நனவாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் - கொழும்பு வீதியில் விபத்தினை அடுத்து வாள் வெட்டு

## ஒருவர் பலி; ஒருவர் காயம்



(புத்தளம்)

புத்தளம்-கொழும்பு பிரதான வீதியின் பங்காதெனிய கோட்டப்பிட்டி சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பங்கதெனிய, கருக்குப்பனையைச் சேர்ந்த 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரே விபத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

கொழும்பில் இருந்து வவுனியா வந்த தனியார் பேருந்து ஒன்றும், எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

விபத்தினை அடுத்து குறித்த பகுதியில் பெருந்திரளானோர் ஒன்றுகூடியமையால் அமைதியின்மை ஏற்பட்டது.

தனியார் பேருந்து சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோருடன் அங்கு வந்த இளைஞர்கள் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இந்த வாக்குவாதம் பின்னர் கைகலப்பாக மாறியது.

இதன்போது அங்கு வாளுடன் வந்த நபர் ஒருவர், அங்கிருந்த ஒருவரை வெட்டிக்காயப்படுத்தினார். இதனையடுத்து, நிலைமை மேலும் மோசமடைய சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாருடன் மேலதிகமாக விசேட அதிரடிப் படையினரும், இராணுவத்தினரும் அவ்விடத்திற்கு வருகை தந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்துச் சம்பவத்தில் உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், வெட்டுக்காயங்களுக்கு உள்ளான நபர் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய பேருந்து சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# 7 இலட்சம் ரூபாவுக்கு குழந்தையை விற்று ஹெரோயின் வாங்கிய தம்பதிகள் கைது

(குருநாகல்)

மூன்று மாதங்களேயான பச்சிளம் கைக்குழந்தையை 7 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்து அந்நிதியைப் பயன்படுத்தி போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் தம்பதியினர் குருநாகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என சிங்கள நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குருநாகலிலுள்ள சட்டத்தரணி ஒருவரிடம் கடிதமொன்றை பெற்றுக்கொண்டு, அநுராதபுரத்தில் உள்ள தம்பதியினருக்கே குழந்தை இவ்வாறு விற்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட 28 வயதான பெண்ணின் பையில் சிறிய குழந்தையொன்றின் ஆடை இருந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே குழந்தை விற்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குழந்தையை விற்ற பணத்தில் 30 ஆயிரம் ரூபாவுக்கு ஹெரோயின் வாங்கி விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

எஞ்சிய பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளனர் என அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# எரிவாயு சிலிண்டர்களின் தரத்தைப் பார்த்து வாங்குங்கள்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் தரம் தொடர்பான தரவுகள் பொறிக்கப்பட்ட சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள தொழில் நுட்ப அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்தார்.




இதற்கமைய, தரநிர்ணய நிறுவனத்தின் தரத்திற்கு அமைய ப்ரொப்பன் அளவு 30 சதவீதமாகவும் பியூட்டேனின் அளவு 70 சதவீதமாகவும் கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், தரம் தொடர்பான தரவுகள் பொறிக்கப்பட்ட சிலிண்டர்களை அவதானித்து பொதுமக்கள் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## வெறுப்பவற்றை விரும்புவது எப்படி?

ஒன்றை எவ்வளக்கெவ்வளவு விரும்புகிறீர்களோ அதை அவ்வளவுக்கவ்வளவு வெறுக்கப் போகிறீர்கள். அதேபோல் ஒன்றை எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதை விரும்பப் போகிறீர்கள். இது தத்துவம் மட்டுமல்ல நடைமுறை உண்மையும் கூட.

ஒருவர் ஒரு விடயத்தையோ ஒரு உணவு வகையையோ ஒரு நபரையோ வெறுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம் அதற்கு அவரால் தர்க்க ரீதியான காரணங்களை கூற முடியுமா? என்றால் பெரும்பாலும் முடியாது என்றே கூறி விடலாம்.

கத்தரிக்காய் சாப்பிட்டால் எனது உடம்பெல்லாம் கண்டு கண்டாக வீங்கி விடும். எனவே நான் கத்தரிக்காயை வெறுக்கிறேன் என்றோ அவன் என் முன்னேற்றத்தையே கெடுத்தவன் அதனால் அவனை அடியோடு வெறுக்கிறேன் என்றோ அவரால் காரணம் படைக்க முடியுமானால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மாறாக காரணம் எதுவுமின்றி அது பிடிக்காது இது பிடிக்காது என்று மைல் நீளத்திற்கு ஒருவர் பட்டியல் இடுவாரேயானால் அது தனக்குத்தானே சிறு வட்டம் ஒன்றைப் போட்டுக்கொண்டு அதற்குள்ளேயே சுற்றி வரும் மடத்தனமான செயலாக இருக்கும்.

நாம் அடியோடு வெறுக்கும் விடயத்தை இன்னொருவர் மிகவும் விரும்புகிறார் என்பது விந்தைக்கு உரிய விடயமல்லவா? அவரால் எப்படி அது முடிகிறது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய கணிப்பில் என்ன கோளாறு? அல்லது மற்றவர் பார்வையில் என்ன சிறப்பு? என்று நாம் எண்ண வேண்டும்.

சரி சற்றும் விரும்பாத ஒரு விடயத்தை ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலைக்கு நாம் ஆக்கப்பட்டால் என்ன ஆவோம் என்பதையும் எண்ண வேண்டும். சிங்கக் கூண்டினுள் சிக்கிய சிறு நரியின் கதையாக அல்லவா ஆகிவிடும்? அத்தகைய சூழ்நிலை உருவாகும் முன் அல்லது நம் எதிரிகளால் உருவாக்கப்படும் முன் வெறுப்பவற்றைக் கொஞ்ச நஞ்சமாவது நேசிக்க முயல வேண்டும்.

மனம் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் உள்ளம் உற்சாகமாக இருக்கும் போதும் உங்களுக்கு மிகவும் பிடிக்காத ஒரு செயலைச் செய்ய மெல்ல முயன்று பாருங்கள்.

அல்லது வெறுக்கும் அந்த உணவு வகையை மெல்லச் சாப்பிட முயலுங்கள். அறிவு என்னும் பார்வையில் தவறான அபிப்பிராயம் என்ற தூசு அடைத்துக் கொண்டு எத்தகைய இருட்டுச் சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டது என எண்ணிப்பாருங்கள்.

ஓர் இன்பமும் ஒரு வித சுவையும் ஒருவித மகிழ்ச்சியும் ஊடுருவிப் பாய்ந்திருப்பதை உணரத் தொடங்குவீர்கள். ஆம் ஏதோ இருக்கத்தான் செய்கிறது. முதலில் பட்டும்படாமலும் இருப்பீர்கள். பிறகு தானாக விருப்பம் வந்துவிடும்.

விரும்புவனவற்றையும் வெறுப்பவற்றையும் அதிக வேறுபாடு காட்டாத மனோபாவத்துடன் ஏற்றுக் கொண்டதால் தான் நாம் விரைந்து முன்னேற முடியும். நம் மனமும் வளமுடையதாக இருக்கும்.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நானே ராஜா



காட்டில் ஆனந்தமாக ஆடிப் பாடியபடி திரிந்து கொண்டிருந்தது நரி.

"நரியே! இன்று நீ மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறாயே! என்ன காரணம்?" என்று கேட்டது கரடி.

"கரடியே! வயதான சிங்கராஜா இன்னும் ஒரிரு வாரங்களில் தனது தலைவர் பதவியை துறந்து விடுவார்.

அதன் பின்னர் அவருக்கு மந்திரியாக இருக்கும் நானே இக்காட்டில் வசிக்கும் எல்லா விலங்குகளுக்கும் தலைவராகி விடுவேன். அதன் பின்னர் நான் என்ன சொல்கிறேனோ, அதைத் தான் நீயும் கேட்டிட வேண்டும்," என்றது நரி.

"நரியே! உன்னுடைய பதவி ஆசை எனக்குப் புரிகிறது. ஆனால், அதே நேரத்தில் நீ தலைவராக வேண்டும் என்று நினைத்தாலும் சிங்கராஜா சம்மதிக்க வேண்டும்.

சிங்கராஜா சம்மதம் தெரிவித்தாலும் கூட, என் போன்ற மற்ற விலங்குகள் எல்லாம் உனக்கு ஒப்புதல் அளித்திட வேண்டும்.

எனவே, இதெல்லாம் நடக்கிற கதையல்ல என்றே எனக்கு தோன்றுகி றது," என்றது கரடி. கரடி இவ்வாறு கூறியதும் நரிக்கு ஆத்திரமும், கோபமும் வந்துவிட்டது.

"கரடி நண்பனே! நீ என்ன கூறுகிறாய்? எவருடைய ஒப்புதலும் எனக்குத் தேவையில்லை! சிங்கராஜா எனக்கு எப்போதோ அனுமதி வழங்கிவிட்டார். அதனால் தான் கூறுகிறேன். அவர் பதவிக் காலம் முடிந்த பின்னர் நானே பதவியேற்றுக் கொள்வேன்," என்றது நரி.

"நரியே! நீ பதவி யேற்றுக் கொள்வதில் உறுதியாக இருக்கிறாய்! ஆனால், கண்டிப்பாக உனக்கு மற்ற விலங்குகளின் ஒப்புதல் வேண்டும். மற்ற விலங்குகளின் ஒப்புதல் இல்லாமல் நீ நிச்சயமாக தலைவராக முடியாது," என்றது கரடி.

"கரடியே! எனக்கு ஒப்புதல் யார் அளித்தாலும், அளிக்காவிட்டாலும் சிங்கத்தின் துணையோடு நான் தலைவராகி விடுவேன். அதன் பின்னர் எனக்கு ஒப்புதல் தராமல் யார் யார் இருந்தார்களோ அவர்களை எல்லாம் நான் பழிவாங்கிடுவேன்," என்றது நரி.

"நரியே! இந்த மாதிரியான துர்குணம் உனக்கு இருக்குமானால், நீ நிச்சயமாக தலைவராக மாட்டாய்" என்றது கரடி. அதனைக் கேட்ட நரியோ கரடியை மீண்டும் கோபத்துடன் பார்த்தது.

"கரடியே! உன் பேச்சினைக் கேட்கிற போது நீயே எனக்கு ஒப்புதல் அளித்திட மாட்டாய் என்று எனக்குத் தெரிகிறது. நான் சொல்வது சரி தானே!" என்று கேட்டது நரி.

"நரியே! நீ சொல்வது தவறு! நானும் இந்தக் காட்டிற்கு புதிய தலைவரைத்தான் எதிர்பார்க்கிறேன். அந்த வகையில் உனக்கு கண்டிப்பாக ஒப்புதல் அளித்திடுவேன். (தொடரும்)

# மகாபாரதம்




வீர வாதம் செய்து போர் புரிகையில் எண்ணற்ற வீரர்கள் இறக்கின்றனர். போரில் புறமுதுகு காட்டி ஓடும் வீரரைப் பாவம் துரத்திப் பிடித்துக் கொள்ளும்.

இப்பாவம் மன்னனைச் சாராது கோழைகளையே பற்றிக் கொள்கிறது. இது போலவே கொல்லாமை மேற்கொள்ளும் வீரர் மனம் ஒன்றிப் போரிடவில்லையெனில் அவர்களையும் கொடிய பாவம் பற்றும்.

அரசர்கள் நரகத்தை அடைவர். தன் மன்னனுக்கு வீராவேசம் கொண்டு போரிட்டு உயிர் துறக்கும் வீரன் சுவர்க்கம் அடைவான்.

கருணையுள்ள வீரன் கூடப் பெரு வீரத்துடன் போர் புரிவதில் உற்சாகம் கொள்வான். இங்கு இரக்கத்திற்கு இடமில்லை. பெருவீரன் மான் கூட்டத்தைச் சின்னாபின்னப்படுத்தும் சிங்கம் போல கர்ஜித்துப் போரிட வேண்டும்.

யுத்தத்தில் யானை மீதிருந்து போரிட்டு மாண்டவன் பிரமலோகத்தை அடைவான். தேரிலிருந்து போரிட்டு உயிர் துறந்தவன் இந்திரர் லோகத்தை அடைந்து இன்பம் அனுபவிப்பான். போர்க்களத்தில் கொல்லப்பட்டவர் சுவர்க்கத்தில் தேவர்களால் பாராட்டப்படுவர்.

கொன்றவர்இங்கு போற்றப்படுவர். எனவே போர்க்களம் செல்லும் வீரன் வெஞ்சமரில் அஞ்சாது போரிட வேண்டும்.

ஆயிரமாயிரம் நதிகள் கடலில் கலப்பது போல, ராஜ தர்மத்துடன் பல்வேறு ஒழுக்கங்கள் அவனை சென்று அடையும்.

தொன்று தொட்டு வரும் தருமங்கள் எல்லாவற்றையும் மன்னன் காப்பாற்ற வேண்டும். தருமத்தை அரசன் கைவிட்டால், தருமம் அவனை கைவிட்டு விடும்.

எந்த நாட்டில் மன்னன் ஆட்சி செம்மையாய் உள்ளதோ அங்கே மழை தவறாது பெய்யும். நாட்டு மக்கள் பிணி முதலான துன்பங்களின்றி நலமாக வாழ்வர்.

மன்னன் எது நடந்தாலும் பொறுமையாக இருந்தால், ராஜ தருமம் ஒழுங்காக நடைபெறாது.

தீயவர்களைத் தண்டிக்கத் தயங்கக்கூடாது. நல்லவர்களை நன்கு பாதுகாக்க வேண்டும். மன்னன் ஆறிலொரு பகுதியைத் தீர்வையாகக் கொள்ள வேண்டும்.

அப்படிக் கொள்பவன் தன் குடிமக்களைப் பாதுகாக்காமலும், பிற நாட்டைக் கைப்பற்றாமலும் இருத்தல் கூடாது. அத்தகைய மன்னனின் திறமையின்மையைப் பயன்படுத்தி அயல் நாட்டவர் அவன் மீது படையெடுத்து வெற்றி காண்பர்.

அந்நிலையில் எதிரி நாட்டுப் பாவமெல்லாம் தோல்வியுற்ற மன்னனை வந்து அடையும்.

யுத்தக்களத்தில் வீரத்துடன் போரிட்டு மாண்ட மன்னவன் விமானத்தில் ஏறி வீர சுவர்க்கம் அடைவான். அவன் உடலில் எத்தனை மயிர்க் கால்கள் உளவோ அத்தனை ஆயிரம் ஆண்டுகள் தேவ சுகம் அனுபவிப்பான். பின் மண்ணுலகில் மன்னனாகவோ, அறவானாகவோ பிறப்பான். ஆதலால் மன்னன் விழிப்புடன் நாட்டை ஆள வேண்டும் என்று முடித்தார் மகேஸ்வரன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
- தந்தை பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன் தேசத்திலும் சிறப்பில்லா மன்னர்களும் உண்டன்றோ!

"... மன்னர்க்குத் தன் தேசமல்லால் சிறப்பில்லை. கற்றோர்க்குச் சென்ற இடமெல் லாம் சிறப்பு என்றார் ஔவையார்.

மன்னர்க்குத் தன் தேசத்தில் சிறப்பு இருக்கும் என்பது ஔவையாரின் அனுமானம்.

ஆனால் தன் தேசத்திலும் சிறப்பில்லா மன்னர்கள் உளர் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

ஆம், நாடாளும் மன்னன் என்போன் நீதிமானாக வாரிவழங்கும் வள்ளலாக, ஏழை பங்காளனாக விளங்க வேண்டும்.

அப்போதுதான் அவன் மன்னன் என்ற சொல்லுக்குரியவனாகின்றான்.

தன் கன்றை இழந்து பரிதவித்த பசுவுக்கு மனுநீதிச்சோழன் வழங்கிய நீதி மன்னனுக்குரியது.

பொற்கைப்பாண்டியன் தனக்குத் தானே வழங்கிய தண்டனை உலகு உறை மன்னர்களுக்கு முன்னுதாரணமானது.

ஆக, மன்னன் என்போன் குடிமக்களை அனைத்து வசதிகளுடனும் வாழ வைக்கும் தகைமை கொண்டவனாக இருக்க வேண்டும்.

அவ்வாறு மன்னர்கள் இருந்தமையால் தான் ... குடி உயரக் கோன் உயர்வான் என்று அறுதியிட்டுக் கூறினார் ஔவையார்.

மக்களின் பசி தீர்க்கும் உணவுத் தானியமான நெல் விளையும்போது அதனால் மக்கள் தம் பசிப் பிணி போக்குவர். அந்நாட்டில் மகிழ்வோடு வாழ்வர்.

அவ்வாறு மக்கள் மகிழ்வோடு வாழும் போது மன்னன் உயர்வான். அவன் புகழ் ஓங்கும். அவனுக்கு அந்நாட்டில் சிறப்புக் கிடைக்கும்.

இங்கு மன்னன் என்ற பதம் மன்னராட்சிக்குரியவனை மட்டும் குறிப்பதாக யாரும் நினைத்துவிடக்கூடாது.

மாறாக, ஜனநாயக ஆட்சியில் மக்களால் தெரிவு செய்யப்படும் அதிகாரம் உடைய ஆட்சித் தலைவரும் மன்னர் வகுதிக்குள் அடங்குவர் என்பது புரிதற்குரியது.

எனவே ஜனநாயகக் கட்டமைப்பில் ஆட்சிப் பதவியில் இருக்கக்கூடியவர்கள் உயர்ந்த பண்புடைய மன்னர்களாக விளங்க வேண்டும்.

மக்கள் குறை தீர்ப்பதை அவர்கள் தங்கள் ஆட்சியில் ஆற்ற வேண்டும். அதுவே அரசாட்சிக்கு அழகு.

ஆனால் இங்கு, ஏழை மக்களை பசி வாட்டுகிறது. பொருட்களின் விலை கண்டபாட்டில் எகிறுகிறது.

கொரோனாப் பெருந்தொற்று மக்களைத் துவம்சம் செய்கிறது.

உணவுப் பொருட்களின் எல்லைமீறிய விலையேற்றத்தால் என்ன செய்வதென்று தெரியாமல் மக்கள் பதறுகின்றனர்.

அந்தோ! இதே கதி நீளுமாயின், இந்த நாட்டு மக்களை பசி வாட்டும். வதைக்கும். எங்கும் வறுமை தாண்டவமாடும்.

இத்தகு மன்னர்களுக்கு தம் தேசத்தில் எங்ஙனம் சிறப்பு ஏற்படும்.

அதோ! கொழும்புப் பல்கலைக்கழக வேந்தருக்கு நடந்த அவமானத்தைப் பார்த்தீர்களல்லவா.

சிறப்பில்லா மன்னர்களின் நியமனங்களும் சிறப்பற்றவை என்பதற்கான சான்றுதான் கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் வேந்தர் பெருமானுக்கு நடந்த கதி என்றால் அது மிகையன்று.

## மன்னார் பிரதேச சபையில் கலவரம் பெண் உறுப்பினர் வைத்தியசாலையில்

(மன்னார்)

மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட அமர்வின் போது ஏற்பட்ட கலவரத்தில் பெண் பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான உறுப்பினர் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மன்னார் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட வாக்கெடுப்பு தொடர்பான கூட்டம் நேற்றுக் காலை 10.30 மணியளவில் மன்னார் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஏற்பட்ட வாய்த் தர்க்கங்கள் கலவரமாக மாறியது. பிரதேச சபையின் பெண் உறுப்பினர் ஒருவர் கட்சி ஒன்றின் உறுப்பினர் ஒருவரை ஒலிவாங்கியால் தாக்க முற்பட்ட நிலையில் குறித்த நபர் பெண் உறுப்பினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான பெண் உறுப்பினர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ஞா-285)

## கஞ்சா மற்றும் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்கள் வவுனியாவில் கைது

(குருமன்காடு)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் பொதிகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர்கள் நான்கு பேரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் தாண்டிக்குளம், புதுக்குளம், மரக்காரம்பளை மற்றும் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 24, 25, 22, 29 வயதுடையவர்கள் ஆவர். (ஞா-250)

## எரிவாயு சிலிண்டர் வெடிப்பு தொடர்பான நிபுணர் குழு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

நாட்டில் எரிவாயு விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக ஒழுங்குப்படுத்தல் குழு ஒன்றை நியமிப்பதற்கும் இரு எரிவாயு விநியோக நிறுவனங்களுக்குமான பொதுவான பரிந்துரைகளையும் உள்ளடக்கிய அறிக்கையை எரிவாயு கசிவுடனான வெடிப்பு சம்பவம் குறித்து ஆராய்ந்த குழுவினர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தனர்.

அறிக்கையில் குறுங்கால, இடைக்கால மற்றும் நீண்டகால அடிப்படையிலான பரிந்துரைகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினால் கடந்த இரு வாரங்களில் லிட்ரோ மற்றும் லாஃப் ஆகிய இரு நிறுவனங்களுக்கும் சென்று பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## எல்லை தாண்டிய இந்திய மீனவர்களால் பரு. முனைப் பகுதி மீனவரின் படகு மீது தாக்குதல்

(கரணவாய்)

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதன் காரணமாக பருத்தித்துறை, முனைப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் மோகன்ராஜ் என்ற மீனவரது படகுக்கு இந்திய மீனவர்கள் கற்களால் எறிந்து தாக்குதல் நடத்தியதால் அவரின் படகு சேதமடைந்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரோலர்களின் அத்துமீறலால் மூன்று மீனவர்களது வலைகள் அறுத்து அழிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சிதைவடைந்த வலைகளை மீட்டுக்கொண்டு மீனவர்கள் கரையை வந்தடைந்துள்ளனர். பருத்தித்துறை முனை கடற்கரையில் இருந்து சுமார் 6 கடல் மைல் தூரத்தில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமது வலைகள் படுக்கவிட்டிருந்த பகுதியால் நூற்றுக்கணக்கான இந்திய இழுவைப் படகுகள் இழுவைமடியை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தது. எமது வலைகள், வலைகள்.. என கத்திய போது இந்திய மீனவர்கள் தகாத வார்த்தைகளால் திட்டியும் கற்களைக் கொண்டு தாக்குதலும் நடத்தினர் என முனைப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (ஞா-60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், பட்டைகாடு, வேப்பங்குளம் 6 ஆவது வீதி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தைரியமாக இருங்கள்

❖ மனிதன் வாழ்வில் எந்த அளவுக்கு உயர்கிறானோ அந்த அளவுக்கு கடுமையான சோதனைகளைக் கடந்தாக வேண்டும்.

❖ தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விட, போர்க்களத்தில் மாய்வது மேலானது.

❖ திட்டம் எதுவும் தேவையில்லை. அதனால், ஆகப்போவது எதுவுமில்லை. கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். அது போதும்.

❖ கோழை தான் வாழ்வில் பாவம் செய்கிறான். தைரியசாலியோ ஒருபோதும் பாவம் செய்வதில்லை.

❖ மக்களிடம் உண்மையான சமத்துவம் எப்போதும் இருந்ததில்லை. இனி இருக்கப் போவதுமில்லை.

❖ சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிர, கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

❖ மற்றவர்களுக்கு நன்மை செய்யும் முயற்சியில், இந்த உடல் அழிந்து போனால் அதுவே மேலானது.

❖ [illegible] ரிடமும் எதையும் எதிர்பாராதீர்கள்.

❖ [illegible] செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
# பொது அறிவித்தல் -2022

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2022.01.01 ஆம் திகதியிலிருந்து எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு சேவை உணர்வுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**01. ஆதன வரி செலுத்துதல்**

2022ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை கோப்பாய். நீர்வேலி. உரும்பிராய் மற்றும் அச்சுவேலி ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களை கேட்டுக் கொள்கின்றேன். மேலும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்த காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

**02. ஆதனப்பெயர் மாற்றம் செய்தல்**

எமது சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினை கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற் கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடை முறைகளைபின்பற்றி பெயர்மாற்றத்தினையும், ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்

**03. கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதி வழங்கல்**

1) வலிகாமம் கிழக்குபிரதேச சபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசம் முழுமையாக 2020.11.01 ஆம் திகதி முதல் நகர அபிவிருத்தி அதிகார சபையினது ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்ட பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ளமையினால், அதற்கமைவாக அனைத்து கட்டுமானங்களுக்குமுரிய அனுமதியினை சபையினது திட்டமிடல் குழுவின் மூலமே பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒருவருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3) அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருந்தால் உரிய உப அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கட்டடஅமைவுச்சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்
4) சபையின் திட்டமிடல் குழுவின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள் மதில்கள். முட்கம்பி வேலிகள். எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள். மலசலகூடங்கள். குழாய்கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகளை மேற்கொள்ளல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.
5) சபையின் திட்டமிடல் குழுவின் அனுமதியின்றி அமைக்கப்படுகின்ற கட்டடங்கள் மற்றும் சட்ட விரோதமாக விதிமுறைகளை மீறி அமைக்கப்படுகின்ற கட்டடங்கள் தொடர்பில். உரிய கட்டணங்களிற்கு மேலதிகமாக சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற தண்டப்பணம் அறிவிடப்பட்ட பின்னரே உரிய அனுமதி வழங்குவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**04. வீதி ஒழுங்கு முறை பேணல்**

எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச்சுவரிற்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள மரக்கன்றுகள் மற்றும் புல்பூண்டுகள். வளவிலிருந்து வீதியை நோக்கி வெளியே வளர்ந்திருக்கின்ற தாவர மற்றும் மரக்கிளைகள். சீமெந்துக்கட்டுக்கள் போன்றவற்றை சம்பந்தப்பட்டோர் உடனடியாக அகற்றியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதி விபத்துக்களை தவிர்ப்பதற்கேதுவாக உரிய வீதி ஒழுங்கை பேணுமாறும் உரிய அறிவுறுத்தல்களை அனுசரித்து நடக்கும் படியும் பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

**05. வியாபார அனுமதிப்பத்திரம் - 2022**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர். முச்சக்கரவண்டி தரிப்பிட அனுமதி மற்றும் எமதுபிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர் 2022ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை பெறுவதற்கான விண்ணப்பத்தை 2022.01.31ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2022.03.31ஆம் திகதிக்குள் செலுத்தி 2022ஆம் ஆண்டிற்குரிய வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அத்துடன் சபையின் பொதுச்சந்தைகள். மீன்சந்தைகள் மற்றும் இறைச்சிக்கடைகள் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து 500 மீற்றர் ( 1/2கிலோமீற்றர்) சுற்றுவட்ட பிரதேசத்திற்குள் மரக்கறி. மீன் வகைகள். இறைச்சிக்கோழி.கோழி இறைச்சி என்பன விற்பனை செய்யப்படுவது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும்என்பதனையும்அறியத்தருகின்றேன்.

**06. துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம்**

2022ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை 2022.03.31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**07. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ஆம் திகதிய மற்றும்1534/18 இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினை பெற்றுக்கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனை புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்களை நடாத்தின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**08. படவரைஞர்களை பதிவு செய்தல்**

2022 ஆம் ஆண்டு புதிதாக படவரைஞராக பதிவு செய்ய விரும்புவோரும். 2022ஆம் ஆண்டிற்காக படவரைஞர் பதிவினை புதுப்பிக்க விரும்புவோரும் எதிர்வரும் 2022.03.31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் புதுப்பித்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும்.

**09. விளம்பரங்களை அமைத்தல் மற்றும் காட்சிப்படுத்தல்.**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள சகல பொது வீதிகளின் இருமருங்கும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் அரச. அரச சார்பற்ற. தனியார் துறை சார்ந்த சகல விளம்பரங்கள்.வர்த்தக நிலையங்களின் முகப்புக்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் சகல விளம்பரங்கள் மற்றும் வளவுகளிலிருந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரங்கள் தொடர்பில் சபையின் துணை விதி இல: 8:1 இற்கமைய அவற்றிற்கான கட்டணத்தினை உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் அனுமதியினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்விடயம் சார்பாக உரிய விளம்பரத்தினை பொருத்தும் அரச. அரச சார்பற்ற. தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வர்த்தக நிறுவன உரிமையாளர்களது பொறுப்பாகும். அத்துடன் உரிய அனுமதி பெறப்படாது காணப்படுகின்ற சகல விளம்பரங்களும் கடிதம் மூலமான 14 நாட்கள் கால அவகாசத்துடன் உரிய இடத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும். இவ்விடயம் தொடர்பில் மேன்முறையீடுகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**10. திண்மக்கழிவுகளை அகற்றுதல்**

ஆதன உரிமையாளர்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். கழிவுப்பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதியின்றி கொட்டுதல் மற்றும் கொண்டுசெல்லல் ஆகியன பொதுச்சுகாதாரத்தை கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே அவற்றினை இயலுமானவரை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பு இல்லாத வகையில் புதைத்து அல்லது எரித்து சுத்தத்தை பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள கழிவுப் பொருட்களை உரிய முறையில் தரம் பிரித்து பிரதேச சபையினது கழிவகற்றல் வாகனத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். நடைமுறையிலுள்ள கழிவகற்றல் வாகன ஒழுங்குமுறை பற்றி சபை அலுவலகங்களை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் ஏனைய தொழில்முறை நிறுவனங்கள் தங்களது கழிவுப்பொருட்கள் அகற்றுவது தொடர்பில் சபையினது உரிய உபஅலுவலகத்துடன் தொடர்புகொண்டு மாதாந்த கட்டணங்கள் அல்லது தடவைகளிற்கான கட்டணங்களை செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை காண்பித்தே சபையினது கழிவகற்றல் வாகனம் மூலம் கழிவகற்றலை மேற்கொள்ளமுடியும். உரிய நடைமுறைகளை பின்பற்றி கழிவகற்றலை மேற்கொள்ளாது சட்டவிரோதமாக கழிவகற்றலை மேற்கொள்கின்றவர்கள் தொடர்பில் உடனடியாகவே சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**11. நீர்வழங்கல் சேவை**

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள். அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபை புத்தூர் உப அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீர் சேவையினை பெற்றுக்கொள்ள முடியும்.

**12. திரவ கழிவகற்றல் மற்றும் கனரக வாகன சேவை**

மலசலகூட கழிவுகள் மற்றும் திரவக்கழிவுகளை அகற்றும் வாகனத்தின் (கலிபௌசர்) சேவை தேவைப்படுவோர் மற்றும் வீதி உருளை வாகனத்தினுடைய சேவை தேவைப்படுவோர் எமது புத்தூர் உப அலுவலகத்தில் உரிய கட்டணத்தினை செலுத்தி அச்சேவையினை பெற்றுக்கொள்ளமுடியும்.

**13. பொதுப்பயன்பாட்டு சேவைகள்**

எமது சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள். ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலை என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கிவருகின்றன. எனவே அச்சேவையினை முழுமையாக பெற்றுக்கொள்ளலாம்.

**14. மயானங்களின் பாவனை**

எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மயானங்களில் (இடுகாடு. சுடுகாடு) ஈமக்கிரியைகளை மேற்கொள்பவர்கள் குறித்த மயான அபிவிருத்திச் சபையினருடன் தொடர்பு கொண்டு அவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**15. பொதுவான விடயங்கள்**

சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பொது இடங்கள். பொது வீதிகள். பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும்வகையில் பட்டாசு கொளுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

மேலே வழங்கப்பட்டுள்ள அறிவித்தல்களிற்கு மாறாக செயற்படுவோர் மீது 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் பிரகாரம் உரியநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இவ் அறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பங்கள் கட்டண விபரங்களை தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ் ,தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**2021.12.21**

(சி-3314)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 பேர்...

கத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,771 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## எரிபொருளின்...

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை அடுத்து டொலர்களை எரிபொருளை இறக்குமதி செய்ய பயன்படுத்தினால் அந்நிய செலாவணி இல்லாமல் பெரும் நெருக்கடியை நாடு எதிர்நோக்கும் நிலையில் எரிபொருள் விலையை அதிகரிக்குமாறு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பெற்றோல் ஒரு லீற்றர் 35 ரூபாயாலும் டீசல் ஒரு லீற்றர் 24 ரூபாயாலும் மண்ணெண்ணெய் 11 ரூபாயாலும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் எரிபொருள் தேவையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கடிதத்தை அவர் டிசம்பர் 10ஆம் திகதி எழுதியுள்ளார்.

எனினும், இந்தக் கடிதத்திற்கு நிதி அமைச்சு இதுவரை பதிலளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஞா)

## எரிபொருள்...

இலங்கை கனியவள கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே ஜனவரி மாதத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் ஜனவரி 23ஆம் திகதி மசகு எண்ணெய் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

இதற்கு முன்னர் மசகு எண்ணெய் நாட்டுக்குக் கொண்டு வரப்படாவிடத்து சுமார் 20 நாட்களுக்கு சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தைத் தற்காலிகமாக மூட வேண்டிய நிலை ஏற்படும் என கூறப்படுகிறது. (ஞா)

## நல்லூர் முட...

பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33,104)

## தமிழ் பேசும்...

நாதன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட மேலும் சில கட்சிகளின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது, 13ஆம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக இன்றைய தினம் மூன்றாம் கட்ட சந்திப்பு இடம்பெறவுள்ளதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தவறாது கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஞா)

## ஒன்றரை வயதுக்...

பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை குழந்தைக்கு திடீர் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. உடனடியாக புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

எனினும் சிகிச்சை பலனின்றி அன்றிரவு 9 மணிக்கே அக் குழந்தை உயிரிழந்து விட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா-33)

## தமிழ் மக்களின்...

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**கேள்வி :-** தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் நீங்களும் கலந்து கொண்டமை வியப்பை அளிக்கின்றது. சுமந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோர் 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது என்றும் நீங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தூக்கிப் பிடிப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்கள். உங்கள் பதில் என்ன?

**பதில்:-** பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு என்றுமே தீர்வாகாது என்பதை நான் முற்றிலும் ஏற்கின்றேன். அதுவே தீர்வு என்று நான் எந்தக் காலத்திலும் கூறவில்லை. கூறவும் மாட்டேன். 13ஆவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சியின் கீழ் அமைந்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் (Decentralization) நாங்கள் எங்கள் தீர்வாக சமஷ்டி அடிப்படையில் கேட்பது அதிகாரப் பகிர்வு (Devolution).

எமது கட்சியின் நிலைப்பாடு கூட்டு சமஷ்டி அரசாங்கம் ஆகும். ஆகவே, சர்வ தேச சமூகத்தினால் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் ஊடாக இறுதித் தீர்வினை எமது மக்கள் தெரிவு செய்வதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் எதிர்பார்ப்பாகும். இதனையே, கடந்த பாராளுமன்றத் தேர்தலிலும் கூறியிருந்தோம்.

இந்த இளம் அரசியல்வாதிகள் இருவருமே எம் தமிழ் மக்களின் அறிவுசார் பாராளுமன்றப் பிரதிநிதிகள். நான் கூறுவனவற்றை அவர்கள் புரியாது பேசுகின்றார்களா? அல்லது புரிந்தும் அரசியல் காரணங்களுக்காக என் மேல் மக்களிடையே வெறுப்பேற்ற முனைகின்றார்களா? என்று எனக்குத் தெரியாது. இருக்கும் சட்டத்தின்கீழ் அதிகாரப் பரவலாக்கம் கேட்கின்றோம். தமிழ் மக்களின் அரசியல் தீர்வாக அதிகாரப் பகிர்வைக் கேட்கின்றோம்.

13ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்கள் பிரச்சினைக்கு ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்கமுடியாது. அதிகாரப் பரவலாக்கமும் அதிகாரப் பகிர்வும் இரு சமாந்திரக் கோடுகள். ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப் பரவலாக்கம் ஒரு திசை என்றால் அதற்கு சமாந்திரமாகவே மறுதிசையில் அதிகாரப் பகிர்வு செல்கின்றது. சமாந்திரக் கோடுகள் ஒன்று சேரா. ஆகவே ஒன்று மற்றையதின் ஆரம்பப் புள்ளியல்ல.

எமது கூட்டுக்கட்சிகள், 13ஆவது திருத்தச் சட்டம் எமது அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தர தீர்வாகும் என்று எங்குமே கூறவில்லை. கூறமுடியாது. மாறாகச்சமஷ்டி அரசியல் யாப்பொன்றே எமக்கு நிரந்தரத் தீர்வளிக்கும் என்றுதான் கூறி வருகின்றார்கள். எங்கள் கட்சி, அதாவது தமிழ் மக்கள் தேசியக்கூட்டணி, கூட்டுசமஷ்டிமுறையே நிரந்தர தீர்வைத் தரும் என்று கூறுகின்றது என்றுள்ளது. (ஞா)

## வீடு தீயில்...

விக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஏ9 வீதியின் நீதிமன்றத்துக்கு அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றுக்கே இவ்வாறு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

வீட்டுப் பொருட்கள் முற்றுமுழுதாக எரிந்து நாசமாகியுள்ளதுடன் வீட்டில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த சீமெந்து மற்றும் ஏனைய பொருட்களும் சேதமாகியுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஞா)

## 14...

ஊர்காற்றுறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 14 பேர் இலங்கைகடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு குறித்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அவர்கள் பயணித்த படகுகள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்கைதாகிய 14 பேருடன் கடந்த 3 நாட்களில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் மொத்த எண்ணிக்கை 69 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஞா)

## கூப்பன் அடிப்...

நாணயக்கார முன்வைத்துள்ளார்.

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை சாதாரண மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளதாக கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார். இதற்கு தீர்வாக, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கூப்பன் அடிப்படையில் அத்தியாவசிய உணவுகளை விற்பனை செய்யும் திட்டத்தை முன்மொழிவதாகவும் அவர் தெரிவித்தார். (ஞா)

## கிணற்றில்...

வெளிப் பகுதியில் அமைந்துள்ள பாரிய தோட்டக்கிணற்றில் நீராடுவதற்காக சிறுவன் ஒருவன் நேற்று குதித்துள்ளான்.

குறித்த சிறுவன் தனது ஆடைகளை கழற்றி கிணற்றின் அருகில் வைத்துவிட்டு கிணற்றுக்குள் குதித்துள்ளான்.

இதனை அவதானித்த அவரது நண்பர்கள் கிணற்றுக்குள் சென்றுபார்த்த போது, அந்த சிறுவனைக் காணவில்லை.

இதனையடுத்து கடற்படையினரின் உதவி கோரப்பட்டு தேடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றது.

குறித்த சம்பவத்தில் அகிலேஸ்வரன் தனுசன் என்ற 16 வயதுச் சிறுவனே காணாமல் போயுள்ளான். (ஞா-299)


தன நிதானய
திகதி - 2021.12.20
சீட்டிழுப்பு இலக்கம் - 652
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 47 61 69 70
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 20.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2917
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 28 29 32 78
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/12/20
சீட்டிழுப்பு இலக்கம் 4622
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 5 9 2 9 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 20/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0970
வெற்றி எழுத்து L
சுப்பர் இலக்க 03
வெற்றி இலக்கங்கள் 01 17 66 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1185
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 6 4 6 1 5 0
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1425
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 20.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,347,820
வெற்றி இலக்கங்கள் 30 60 66 72
ஆங்கில எழுத்து T
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3760
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 20.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,475,540
வெற்றி இலக்கங்கள் 24 25 55 70
ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1599
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 20.12.2021
தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் J 01 27 45 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 50,425,166/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,505,190/=
திகதி 20.12.2021
வெற்றி வாரம் 3311
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 22 34 35 60 மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,501,460/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1795
சீட்டிழுப்பு திகதி 20.12.2021
வெற்றி இலக்கங்கள் 01 15 29 51
ஆங்கில எழுத்து U
எதிர்வரும் சுப்பர் திசப்பொதி ரூ. 29,122,488/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமியின் கொலைக்கு நீதிகோரி முல்லையில் கண்டனப் போராட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு உடையார் கட்டு வடக்கு மூங்கிலாறு கிராமத்தில் கொலை செய்யப்பட்ட சிறுமிக்கு நீதிகோரி முல்லைத்தீவு மூங்கிலாறு கிராம மக்களால் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று மூங்கிலாறு கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மூங்கிலாறு சந்தியிலிருந்து பேரணியாக உடையார்கட்டு மகா வித்தியாலயம் வரை பேரணியாக சென்று கறுப்பு கொடிகள் மற்றும் கறுப்பு பட்டிகளை அணிந்து கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (ஞா-281)



அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

# நாடு தழுவிய ரீதியில் இன்று போராட்டம்

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று 5 மாவட்டங்களில் ஆரம்பித்த வேலைநிறுத்தை இன்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, 5 மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் நேற்றைய தினம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் சுகாதார அமைச்சினால் 500 வைத்தியர்களுக்கான நியமனப் பட்டியல் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக அந்த சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் குறிப்பிட்டார். (ஞா)

# வவுனியாவில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான 34 வயதுடைய பெரியசாமி நாகராஜன் என்பவரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ஞா-250)


"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"
TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்பப்பிரிவு

## விசேட செயலமர்வு

A/L 2021 பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து மாணவர்களுக்குரியது

26 and 27 DECEMBER 2021 – பொறியியல் தொழிநுட்பவியல் உயிர்முறைமைகள் தொழிநுட்பவியல்
28 and 29 DECEMBER 2021 – தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம்
30 and 31 DECEMBER 2021 – ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம், ஊடகக் கல்வி

## அனுமதி இலவசம்

கருத்தரங்கிற்கு ஏன் சமூகமளிக்க வேண்டும்...
- 5 வருடமாக மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்...
- A/L பரீட்சை வினாத்தாள் திருத்தும் ஆசிரியர்களால் கருத்தரங்கு மேற்கொள்ளப்படுகிறது.
- பரீட்சையை எதிர்நோக்கிய வினாக்கள் அடங்கிய வினாத்தாள் கையேடுகள் விடைகளுடன் வழங்கப்படும்.

இடம் – வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகில் யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு... 0770175346
(C-3310)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் கனகர் வளவு 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
14 அடிப் பாதையுடன்
சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
(தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (9161)
தொடர்புகளுக்கு
077 814 7389, 070 705 1655



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9158)
076 825 7716 (ஆகாஸ்)



Supported by the Federal Ministry for Economic Cooperation and Development · Coordinated by sequa · Implemented by · Local Project Partner CCIY · cooperation partner AHK · BM Partnership

## உங்கள் உணவுப் பொருட்களை வெற்றிகரமாக சந்தைப்படுத்துவது எப்படி

செவ்வாய், 21 டிசம்பர் 2021 நேரம்:02.00pm-03.00pm SLT

சர்வதேச சந்தையில் நிறுவனத்தின் வெற்றியினை உறுதி செய்வதில் உணவு உற்பத்திப் பொருட்களின் பொதியிடல், பட்டியலிடல் மற்றும் தரச்சான்றிதழ் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. உங்கள் தொழிற்துறை/ வணிகத்தை பாதிக்கும் தற்போதைய நகர்வுகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப்பற்றி இக் கருத்தமர்வினூடாக அறிந்து கொள்ளமுடியும். நீங்கள் இந்த இணையவழி கருத்தரங்கில் பங்கேற்பதன் மூலம் வளவாளர்களிடமிருந்து நேரடியாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன், உங்களின் உணவு உற்பத்திகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் தரக் கட்டுப்பாட்டு தேவைகளைப் பூர்த்தி செய்வதனை உறுதிசெய்து கொள்ள முடியும்.

பேச்சாளர்கள்:

Mr. Vinayakarasa Thirumalavan
MSc, BSc(Spcl),
Food Safety Specialist, CCIY



Mr. Malintha Gajanayake
Head of Corporate Affairs & Export Promotions
Delegation of German Industry and Commerce in Sri Lanka
BBA(Hon). UK.



Mr.Kanagasabathy Nanthakumaran
FCMA (UK),
CGMA, MBA(Aus)
Consultant - Business Development



CCIY is inviting you to a scheduled
Zoom meeting
Topic:
Webinar on Food Packaging, Labelling & Certification.
Time: Dec 21, 2021
02:00 PM SLT
Join Zoom Meeting
https://us02web.zoom.us/-j/83618607973?pwd=TDdxNHNrSll6UzdG-Mzgyb3FydHhldz09
Meeting ID: 836 1860 7973
Passcode : 026945

மொழி: ஆங்கிலம் & தமிழ்

வட பிராந்திய நிறுவனங்களுக்கென ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தரங்கு.

தொடர்புகளுக்கு:
யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்.
இல.88 கச்சேரி,நல்லூர் வீதி யாழ்ப்பாணம்.
Manager Admin
+94 21 222 6609, 070 366 3604
info@cciy.lk
(C-3317)

எடுத்துச் செல்வது பின்வருமாறு:
- சந்தையின் நவீன போக்கிற்கு ஏற்ப பொதியிடல், பட்டியலில் மற்றும் சான்றுப்படுத்தல் அத்துடன் ஐரோப்பிய சந்தைகளுக்கு கூடியகவனம் செலுத்தப்படுகிறது.
- சந்தையின் போட்டித்தன்மைக்கேற்ப புத்தாக்க பொதியிடல் அதனுடன் தொடர்புடைய தேவைப்பாடுகள்.

CCIY வெபினார் தொடரின் 1 பதிப்பு
ஒழுங்கமைப்பு: யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL
(C-3286)



## சிறுநீரகம் தேவை

42 வயதையுடைய
O பொசிற்றிவ்
இரத்த வகையைச் சேர்ந்த
ஒருவருக்கு உடனடியாக
சிறுநீரகம் தேவை. (C-3316)
077 396 5583
077 517 1307



## கடை வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கு நிலையில் சகல தளபாடங்களுடனும் கடை வாடகைக்கு உண்டு. (9162)
076 704 9048



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-3237)

எமது கிளைகள்
கிளிநொச்சி சுன்னாகம்
சாவகச்சேரி மானிப்பாய்
நெல்லியடி பருத்தித்துறை
திருகோணமலை வல்வெட்டித்துறை
கோப்பாய் புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 20'000/-
பயிற்சியின்போது - 15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com


## கண்ணீர் அஞ்சலி

ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தரும்
அகில இலங்கை சமாதான நீதிவானும்
எம் ஆருயிர் நண்பன் மகாலிங்கம் சுலக்சன்
அவர்களின் அன்புத் தந்தையாருமான



அமரர்
கிருஸ்ணபிள்ளை மகாலிங்கம்

தோற்றம்: 30.07.1949 மறைவு: 19.12.2021

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காக எம்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

யாழ். நகர் (9166) சுலக்சனின் நண்பர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.